பதிவு எண் M. 4900 16 பக்கங்கள்.

குடிஅரசு

நிறுவியது: 1924.

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0 ,, 0-2-6.

மாலை 22 } ஈரோடு 16-7-1949 சனிக்கிழமை } மலர் 45.

# திருமண எண்ணம்.

★

## தோற்றத்துக்கும் அவசரத்துக்கும் முக்கிய காரணம்.

★

என்னைக் கொன்று விடுவதால் எனது பலதரப்பட்ட உள் எதிரிகளின் பல கஷ்ட நஷ்டப் பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என்பது தர் ஆலோசனையின் முடிவாயிருந்ததால் அதற்கு வேண்டிய காரியம் சில நாட்களாக நடந்து வருவதாக அறிந்து வந்கேன்.

எங்கள் ஜில்லாவில் இது சாதாரணமாகப் பெரிய குடும்பங்களில் நடப்பது சகஜம். இதுபோலவே சென்னையிலும் எதிரியைக் கொன்றுவிடுவது என்பது சகஜம்.

அதிலும் சென்னையில் இந்த ஏற்பாடு சுலபமாய் செய்யக்கூடிய அளவுக்கு அங்கு ஆட்கள் உண்டு.

இந்தக் கொலை ஏற்பாட்டுக்குக் காரணம் "என்னிடம் கொஞ்சம் பணமிருக்கிறது", அதோடு அதிசயிக்கத்தக்க வண்ணம் என் உடல் நிலை நோய் நொடி இல்லாமல் நல்ல உழைப்புக்குப் பயன்பட்டு வருகிறது, என் ஆயுளும் எப்படியோ வளர்ந்து வருகிறது.

என் ஆயுள் உள்ள வரையிலும் சுயநலக்காரர்களுக்கும், இயக்கத்தால் பணம், பதவி, பெருமை பெறலாம் என்று அவசரப்படுபவர்களுக்கும், தன்னிஷ்டப்படி இயக்கத்தைத் திருப்பிக் கொள்ளலாம் என்று கருதுபவர்களுக்கும், இயக்கத்தின் பேரால் பணம் வசூல்செய்து வயிறு வளர்ப்பவர்களுக்கும், சில மைனர்களுக்கும் பெரிய சங்கடமாயிருந்ததால் என்னைக் கொன்றுவிடுவதைத் தவிர வேறு வழி சர்த்தியமற்றதாகி விட்டது.

ஏன் எனில், எதிரிகள் பலர் வேறு வழியில் பல தடவை செய்த முயற்சிகள், எதிரிகளுக்குப் பயன் தராமல் தோல்வி அடையவேண்டியதானதோடு, அதற்கு ஆக அவர்கள் நிபந்தனை அற்ற சரணாகதி அடையவேண்டியதாகவும் ஏற்பட்டு விட்டதால், கொலையே தக்க பரிகாரம் என்ற முடிவுக்கு வரவேண்டியவர்களாகி விட்டார்கள்.

6, 7 மாத காலமாய் என்னை சந்திக்க நேர்ந்த பல நண்பர்கள் "வெளியே தனிமையாய்ப் போக வேண்டாம்" என்று வலியுறுத்திச் சொல்லி வந்தார்கள். நான் அலட்சியமாக அதைக் கருதி, அப்படிப் போகிற உயிர் போகட்டுமே, நான் என்ன அற்ப வயதுக்காரனா? 70 ஆண்டைக் கடந்துவிட்டேனே என்று சொல்லுவேன்.

அதற்கு அவர்கள் என்னைப் புகழ்ந்து கூறி எச்சரிக்கை செய்வார்கள். நான் வெளியில் செல்லும்போது வம்பில், நான் "கூட வர வேண்டாம்" என்றாலும் எனக்குத் துணை விடுவார்கள். என் கூடவே இருந்து இப்போது எனக்குப் பக்காத் துரோகிகளான எனது சிஷ்யர்கள் என்பவர்களே கூட சதா என்னைப் பயப்படுத்துவார்கள். இந்தப் பழக்கத்தால் நானும் சதா துணைதேடுவதில் கவலைகொள்ளும்படியாக ஆகி விட்டேன்.

சென்னையில் நான் இருக்கும் வீட்டில் அடிக்கடி சந்தேகப்படும்படியாக பலர் வருவதும், நாம் கவனித்தால் சரியான தகவல் சொல்லாமல் ஓடுவதும், சிலரை, நான் ஷெ ஆள்களில் ஒருவரை விட்டு விரட்டுவதும், வருபவர்களையெல்லாம் முதலில் சந்தேகித்து சோதனை பார்த்து உட்காரவைப்பதுமான காரியங்கள் வெட்கப்பட்டுக் கொண்டு செய்யவேண்டியதாகி விட்டது. சீட்டு இல்லாமல் யாரையும் விடவேண்டாம் என்று கண்டிப்பாய் உத்திரவு போட்டு ஒரு ஆளைப் போட்டு விட்டேன். கூட இருக்கும் தோழர்கள் சதா என்னுடன் இருப்பதற்கு இதைப் பயன்படுத்திக்கொண்டு எனக்கு மேலும் கவலையை உண்டுபண்ணி விட்டார்கள்.

நிற்க, நான் பணம் காசு விஷயத்தில் அதிக சிக்கனப்புத்தி உள்ளவன், பணம் காசு விஷயத்தில் யாரிடமும் நம்பிக்கைவைக்க முடியாதபடி என்னைச் சுற்றித் திரிந்

தோழர்கள் நடந்துவந்தார்கள்.

இயக்கம் எப்படி இருந்தாலும் இயக்கத்துக்கு யார் தலைவராய் இருந்தாலும், என்னுடைய கொள்கைகளும், கொள்கைக்கு ஏற்ற பிரசாரமும், எனக்குப் பின்னும் நடந்தேற வேண்டும் என்கின்ற பேராசை எனக்கு உண்டு.

இயக்கம் நடந்துவர ஏதாவது ஏற்பாடு இருந்தால்தான் முடியுமே ஒழிய, இப்போதுபோல் ஒரு மனிதனிடம் இருக்கும் தனி மரியாதையால் இனி நடந்துவர முடியாது என்கின்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டு 2-வருஷம் ஆகிவிட்டதுடன் அப்படிப்பட்ட தனிமனிதனை மக்கள் இனி உண்டாக்கிக் கொள்ளவும் மாட்டார்கள், ஒப்புக்கொள்ளவும் மாட்டார்கள் என்பதும் என் முடிவாகிவிட்டது. மேற்கண்ட எல்லாக் காரணங்களாலும் நான் ஒரு ஏற்பாடு செய்ய எண்ணினேன். இந்த ஏற்பாட்டுக்கு சம்பத்தை பல தடவை நினைத்தேன். அவன் இயக்கத்தினுடையவும் என்னுடையவும் எதிரிகளினுடைய கையாளாகி விட்டான். மகா சூதனாகவும் காணப்பட்டு விட்டான். ஒரு தடவை அல்ல.

இந்தஏற்பாட்டில் இன்று சென்னையில் தங்களுக்குள் ஒற்றுமை இல்லாவிட்டாலும், "என்னை எப்படியாவது ஒழித்துக் கரைத்து விட்டுவிடவேண்டும் என்ற காரியத்தில்--கருத்தில் சிறிதுகூட பேதமில்லாத ஒற்றுமை கொண்ட கூட்டத்தவரையும், மற்றும் அவர்களது வெளியூர் பொறுப்பற்ற நண்பர்களையும் கண்டிப்பாய் நான் சேர்க்கமாட்டேன்!" என்றும், அனேகமாக அவர்கள் அந்த ஏற்பாட்டில் விலக்கப்பட்டே போவார்கள் என்றும் அவர்களுக்கு நன்றாய்த் தெரிந்து விட்டது.

அதற்கு ஆக, அவர்கள் இந்த 5, 6 மாதமாய் சிறப்பாக 3 மாதமாய் ஊர் ஊராகக் கட்சி சேர்த்தார்கள். இந்த நிலையானது நான் எல்லாத்தலைவரையும், தொண்டரையும் நிர்தாட்சண்ணியமாய் நடத்தி வந்ததாலும், அவர்கள் யாராயிருந்தாலும் மிகவும் கண்டிப்புச் செய்து வந்ததாலும், என்னிடம் வெறுப்பும் துவேஷமும் கொண்டிருந்த மக்களில் உல்லாசத்துக்கும், சுயநலத்துக்கும், பெருமைக்குமாகக் கட்சியில் இருந்து பயனடைந்து வருகிறவர்களுக்கு, என்மீது சமயம் பார்த்துப் பழி வாங்கவேண்டிய அளவு ஆத்திரம் ஏற்பட்டிருந்தது. அதிலும் சிறு பிள்ளைகளுக்கு அதாவது "நேற்று வந்து இன்று" பேச்சாளி, எழுத்தாளி ஆக ஆகிவிட்டதாகக் கருதிக் கொண்டிருப்பவர்களுக்கும், அடிக்கடி பேச்சுக்கு ஆகப் பல ஊர்களில் இருந்து அழைக்கப்படுகிறவர்களுக்கும் நான் எதிரியாகவே காணப்பட்டு விட்டதால், இந்தக் கூட்டமும் சேர்ந்து எதிரிக்குக் கையாட்களாக ஆகி ஒரு அய்க்கிய முன்னணி ஆகி விட்டார்கள்.

இதன் பயனாய் அவர்களிடம் விஸ்வாசமற்ற தன்மையையும், பொய்ப்பக்தி காட்டும் தன்மையையும் நான் தெளிவாய் கண்டு வந்ததோடு, அவர்கள் வெளியில் என்னைப்பற்றிப் பேசுவதையும், கட்சி சேர்ப்பதையும் நான் அடிக்கடி கேள்விப்பட்டு வந்தேன்.

இவைகள் எல்லாவற்றுடன் இந்தி எதிர்ப்பில் இந்தக் கூட்டம் செய்து வந்த துரோகமும் சேர்ந்து என் உணர்ச்சியையும், ஊக்கத்தையும் குறைத்து வந்ததோடு, இப்படிப்பட்ட ஆட்களை வைத்து இனி கட்சியில் ஒரு காரியமும் செய்ய முடியாது என்று கருதி, சீக்கிரம் ஏதாவது ஒரு கட்டுப்பாடான ஒரு ஏற்பாடு செய்ய வேண்டிய அவசியத்துக்குத் தூண்டி விட்டது.

கடைசியாக கோவை மாநாட்டில் மேடையிலும் தனிமையிலும் இதைச் சொல்லிவிட்டேன். அவ்வளவுதான் தாமதம். உடனே விஷமப் பிரசாரத்துக்குக் கட்டுப்பாடாய் ஆரம்பித்து விட்டார்கள். முதல் முதல் தஞ்சை திராவிட மாணவர் மாநாட்டில் கொட்டிவிட்டார்கள்.

இதை விடுதலையிலும் தந்திரமாக பிரசுரித்துவிட்டார்கள். மற்றும் சில சங்கதிகள் என் காதுக்கு வந்தவுடன் அதைக் கண்டிக்கும் முறையில் ஒரு குறிப்பு எழுதச் செய்து விடுதலைப் பத்திரிகையில் போடும்படி சென்னைக்கு அனுப்பினேன். அதில் இரகசியம் என்று எழுதி அனுப்பினேன். அது போடப்படவில்லை. அதோடு மாத்திரமல்லாமல் அதை உரியவரல்லாதவர் இரகசியமாய் உடைத்துப்பார்த்து உடனே யாரைப்பற்றிப் போடும்படி எழுதினேனோ அவருக்குச் சேதி கொடுக்கப்பட்டு நேரில் போய்க் காட்டப்பட்டு உஷார் படுத்தப்பட்டு விட்டது.

அச்சேதி சரியானபடி பிரசுரித்திருந்தால் இன்றையச் சம்பவங்கள் இவ்வளவு சீக்கிரத்தில் நடந்திருக்காது. எதிரிகளுக்கும் இவ்வளவு செல்வாக்கு ஏற்பட்டிருக்காது.

அந்தச் சேதி எனது பத்திரிகையிலேயே போடப்படவில்லை என்பதும், உடனே தகவல் கொடுக்கப்பட்டது என்பதும் நான் தெரிந்த உடன் பதறி விட்டேன். அதே ஆத்திரத்தில் நான் சென்னை வந்த உடன் ரிஜிஸ்ட்ரார் ஆபீசுக்குப் போய் நோட்டீஸ் கொடுக்கும் பாரமும் பெற்று விதமும் தெரிந்து வந்தேன். கவலையோடு யோசித்தேன். இதன் மத்தியில் சில இரகசிய ஏற்பாடுகள் அதாவது இந்த எதிரிகள் ஊர் ஊராய்ச் சென்று ஒரு எதிர்ப்பை ஏற்படுத்தத் திட்டமிட்டிருப்பதையும் தெரிந்தேன்.

மணியம்மைக்குக்கூடத் தெரியாமல் அந்த பாரத்தில் கையெழுத்து வாங்கி ரிஜிஸ்ட்ரார் ஆபீசுக்கு அனுப்பிவிட்டேன். ஆனால் நான் அதை அனுப்பியது அந்தக் கோஷ்டியைச் சேர்ந்த ஆள் வசமே அனுப்பியதால் அது திருட்டுத்தனமாய் பார்க்கப்பட்டு உடனே வெளியாக்கப்பட்டு விட்டது. அதைப்பற்றிக் கவலைப்படாமல் ஊருக்குப் புறப்பட்டு போய்விட்டேன்.

பிறகு உடனே எதிரிகளால் அவர்கள் திட்டப்படி எதிர்ப்பு துவக்கப்பட்டது. பலருக்குத் தந்தி டெலிபோன் செய்து வரவழைத்துப் பேசி, ஆத்திரம் ஏற்படும்படியான பல பொய், கற்பனை, மிரட்டல்களைக் காட்டிக் கையெழுத்து வாங்கித் துண்டு விளம்பரம் அச்சடித்துக்கொண்டு ஜில்லா ஜில்லாவுக்கு ஆள்கள்புறப்பட்டார்கள். அது வெற்றிகரமாய் நடந்தவந்தது. இந்த எதிர்ப்பு வேலை என் மனதில் தோன்றிய எண்ணங்களை உறுதிப்படுத்தி வந்தது. அதை தெரிவித்தும் விட்டேன்.

(தொடர்ச்சி 15-ம் பக்கம்)

# சவக்குழி நோக்கி...!

★

சென்றுகொண்டிருக்கிறது, காங்கிரஸ் ஸ்தாபனம்!

ஆம்! அரும்பெரும் தலைவர்கள் அல்லும் பகலும் அயராது உழைத்து வளர்த்த காங்கிரஸ் ஸ்தாபனந்தான்; மக்கள் மன்றத்தில் பெருமிதத்துடன்—சற்று மிடுக்குடன் உலவிய மக்கள் கட்சிதான்—வெள்ளையரை விரட்ட வீர முழக்கம் எழுப்பிய வீரர் கட்சிதான் இன்று சவக்குழியை நோக்கி விரைந்துகொண்டிருக்கிறது.

காங்கிரஸ்—பெரியார் ஈ.வெ.ரா. வாலும், திரு வி. கல்யாணசுந்தரனாராலும், டாக்டர் வரதராஜுலு நாயுடுவாலும் பட்டி தொட்டி தோறும் கதர் மூட்டை தூக்கி வளர்க்கப்பட்ட ஸ்தாபனம்; திருப்பூர்க் குமரனைத் தடியடிக்குத் தாக்கல் செய்த ஸ்தாபனம்; வெள்ளை ஏகாதிபத்தியத்தை அழிக்க வீரர் சிதம்பரனாரைப்பலிகொடுத்தஸ்தாபனம்; மதவெறி என்ற பலிபீடத்திலே உத்தமர் காந்தியாரைக் கிடத்திய ஸ்தாபனம்!

காங்கிரஸ் ஒருகாலத்தில் பாலைவனத்திலிருக்கும் 'ஒயசிஸ்' போலத் தென்பட்டது நாட்டுமக்களுக்கு. அடிமைப் பிணிப்பில் கட்டுண்டு கிடந்த மக்கள் வாழ்வுக்குத் தென்றலாக இருந்தது. பரங்கியருக்குப் பணிந்துகிடந்த மக்களைத் தட்டியெழுப்பி போர்முனைக்கு அழைத்துச்சென்ற விடுதலைப் போர் முரசாக இருந்தது.

இத்தகையவீரவரலாறுபடைத்த உயரிய ஸ்தாபனம்தான்—உடல் பொருள், ஆவி அனைத்தையும் கிஞ்சித்தும் பெரிதென மதியாது, தாய்நாட்டின் சுதந்திர பலிபீடத்திலே தங்களை அர்ப்பணித்துத் தூக்குமேடை ஏறிய கர்ம வீரர்கள் வளர்த்த திருச் சபைதான் இன்று மக்கள் மன்றமாக இல்லை. மக்களின் உயிர்நாடி போன்ற ஜனநாயகத்தை வெட்டிச் சாய்த்து சவக்குழி நோக்கி இழுத்துச் செல்லும் வெட்டியானாகக் காட்சியளிக்கிறது காங்கரஸ்! எந்த ஏகாதிபத்தியத்தை ஒழிக்க மக்கள் கண்ணீர் சிந்தினார்களோ — பாடுபட்டார்களோ—குருதி உகுத்தார்களோ—வியர்வை கொட்டினார்களோ—இன்னல் பல அடைந்தார்களோ அத்தனையும் இன்று விழலுக்கிறைத்த நீராயிற்று.

இன்று காங்கரஸ் ஸ்தாபனம் ஆணவக்காரர்களால் ஆட்டுவிக்கப்படுகிறது. தும்பை நிறத்துக்குள்ளே துரோகப் பூச்சிகளை மறைத்தாற்போல, கதர் சட்டையணிந்துகொண்டு காங்கரசையே சுயநலக் கிருமிகள் வளரும் குட்டையாக மாற்றிவருகின்றனர். இரத்தத்தை உறிஞ்சி வாழும் அட்டைப் பூச்சிகள் நிறைந்த சேற்றுத் தடாகமாக மக்கள் மனதிலே பதிந்துவிட்டது, காங்கரஸ் ஸ்தாபனம்!

காரணம்?

தனித் தனியே கவனிப்பாரற்று துண்டுபட்டுக் கிடந்த டாட்டா, பிர்லா போன்ற பணமூட்டைகள், இருட்டுச்சந்தை எத்தர்கள், உழைப்போரை உதாசினம் பண்ணும் உலுத்தர்கள், மனித வாழ்வைத் தட்டிப் பறிக்கும் ஈவு இரக்கமற்ற நிலப்பிரபுத்துவ அட்டைகள்—இவை யாவும் காங்கரசைக் கைப்பற்றிக்கொண்டன. இவைகளின் ஆதிக்கம் வளர்ந்து வளர்ந்து அதன் காரணமாக இன்று அந்தக் காங்கரஸ் வட்டாரத்திலே உயரப்பர்கள் ஏராளமாகக் காட்சியளிக்கின்றனர். இவ்வாறு காங்கரஸ் பணமூட்டைகள் தாழ்வாரத்தில் தவழ்கிறது—ஆலை அரசர்கள் அடிவருடிகள் தங்குமிடமாக மாறிவிட்டது.

பத்திரிகை சுதந்திரம் பறிபோகிறதே என வெள்ளையன் காலத்தில் புரட்சிக் குரல் எழுப்பிய காங்கரஸ், இன்று ஆட்சிபீடம் ஏறியதும் "விடுதலை"க்கு 2000 ஜாமீன் கொடு என்று கேட்டது. பிறகு அதனையும் பறிமுதல் செய்து மீண்டும் 10000 ரூபாய் கேட்டது. பகுத்தறிவுக் கொள்கைகளைப் பக்குவமாய் வாரியிறைக்கும் "குடி அரசு" பேரிதழுக்கு ரூபாய் 3000 ஜாமீன் என்றது. இவ்வாறாகத் தங்கள் குறைகளை எடுத்துக் கூறி வரும் துணிவுபடைத்த பேரிதழ்கள்மீதெல்லாம் அடக்குமுறைப் பாணங்களை அடுக்கடுக்காக வீசிய வண்ணம் இருக்கிறது.

உரிமை, உரிமை என உரிமைக் குரல் எழுப்பி வெள்ளையனை விரட்டிய காங்கரஸ் இன்று பேச்சுரிமைக்குத் தடை விதிக்கிறது. உரிமைக் குரல் எழுப்பும் மாற்றுக் கட்சியினருக்குச் சிறைச்சாலையைப் பரிசாக அளிக்கிறது.

"நாலரைக்கோடி மக்களின் வாழ்வை நாங்கள் செம்மைப்படுத்துகிறோம்" என்று ஜம்பம்பேசி அரியணை ஏறிய காங்கரஸ் அரசாங்கமும், அப்பணியின் அங்கங்களாகிய காங்கரஸ் மந்திரிகளும் பணக்காரர்களை அரவணைத்து, பொதுமக்களின்மீது வரிகளைச் சுமத்தி அவர்களை வறுமைக் குழியில் தள்ளிவருகின்றனர்.

பொதுமக்களே தீர்ப்பளிக்கும் காலம் நெருங்கிவிட்டது என்பதற்கு வங்காளத் தேர்தல் ஒரு எடுத்துக்காட்டு!

அதோ பாருங்கள் நாட்டிலே உலவும் மக்களது உள்ளக் குமுறலை!

"தியாக புருஷர்கள் தேர்தலுக்குப் புறப்பட்டபொழுது வெள்ளையனைக் கசையடி கொடுத்து விரட்டுவோம்; வேதனையைத்தீர்ப்போம்; நலம் விளைப்போம்; வளம் பெருக்குவோம்; பஞ்சம், பட்டினி, வரிச்சுமை, வறுமை தொலைப்போம் என்று மேடைமீது ஏறி மேடைப் பிரச்சாரம் செய்து படாடோப வாழ்வு பெறவந்தபோது நாங்கள் இந்தச் சூதுப் பிரச்சாரத்தை அறியாது, பாரததேவியின் தவப் புதல்வர்களே! வாழ்க! எங்கள் ஓட் காங்கிரசுக்கே! என்று பாசுரம் பாடி வரவேற்றோமே! அய்யோ—இன்று வெள்ளையன் காலத்திலில்லாத அடக்குமுறைகளை—வரிச் சுமைகளை நம்மீது வீசுகின்றனரே! இந்தத் தூர்த்தர்கள் தொலையமாட்டார்களா?"

"நாட்டின் தலைவர்கள் அல்ல இவர்கள்—நாட்டினரின் வரிப் பணத்தில் நலன் பல பெற்று சுக போக வாழ்வு நடத்துகிற நாஜிகள்!"

இவ்வாறாக சுயராஜ்ய மக்கள் வேதனை வெண்பா பாடிக்கொண்டிருக்க, தொழிலாளர் துடிக்க, விவசாயிகள் வெம்ப, அரசாங்க அலுவலர்கள் பரிதவிக்க இந்த சுயநலக்காரர்கள் 'ஜார்' ஆட்சி

(தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க)

ரோஜா முத்தையா

# சரபோஜியின் கரங்கள்!

★

(சென்ற வாரத் தொடர்ச்சி.)

வாளும் கேடயமும் ஏந்தவேண்டிய சரபோஜியின் கரங்கள் துளசியைப்பற்றி அய்யுற்ற பாவத்திற்காக 'அபசாரம், அபசாரம்' என, வாய் முணுமுணுக்க, கன்னத்தில் போட்டுக்கொண்டன. தஞ்சையைக் காக்கும்படி அவன் நாபகவானிடம் முறையிட்டுக் கைகள் தொழுதன.

*    *

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் தளபதி ப்ரெட்ரிக்கும் கேப்டன் கன்னிங்கும் உரையாடிக்கொண்டிருந்தனர்.

"சார், தஞ்சை நம் படைவீரர் வசம் வந்துவிட்டதென்ற மகிழ்ச்சியான செய்தி வந்திருக்கிறது. திருச்சி 'கிளைவ்' இல்லத்தில் நாம் தங்கியிருந்தபொழுது, இரண்டு பிராமணர்கள் தங்கள் குரு ஆரியப் பட்டரிடமிருந்து 'நம்மைப் படையெடுத்துவரும்படியும் எதிர்ப்பு ஒன்றுமே இல்லாமல் தான் பார்த்துக்கொள்வதாயும்' எழுதிய கடிதமொன்றைக் கொண்டுவந்தார்களே! அப்போது நீங்கள்கூட நம்பவில்லையே. உண்மையாகவே அவர் எழுதியிருந்தபடி ஒருவிதமான எதிர்ப்புமில்லையாம். நம் வீரர்களின் நக அழுக்குக்கூட சேதமில்லையாம். நம் சாம்ராஜ்யம் பரவுகிறது. வாழ்க மாட்சிமை தங்கிய பிரிட்டிஷ் அரசியார்!"

"வெகு சந்தோஷம், கன்னிங். நம் கவர்னர் ஜனரல் வெல்லெஸ்லி பிரபுவுக்கு அவரது பதவி காலத்திலேயே இந்த இந்துஸ்தானம் முழுவதும் பிரிட்டிஷ் ஆட்சியைப் பரப்பிவிடவேண்டுமென்பது ஆசை. அவர் கனவு நனவாக நம் முயற்சி பெரிதும் தேவை. அதிலும் இந்தக் கருப்பர்களிடையே அய்ந்தாம் படையினர் நிறைய இருக்கின்றனரப்பா. அது நமக்குச் சகாயந்தான்."

வாயிற் காவலன் யாரோ இருவர் அவர்களைப் பார்க்க விரும்புவதாகத் தெரிவித்தான். அனுமதிக்கும்படி உத்திரவிட்டான் பிரெடிரிக்.

உள்ளே வந்த இருவரையும் ஆவலாக எதிர்சென்று "ஹல்லோ நீங்களா, 'ப்ராஹ்மன்ஸ்'! எங்களுக்கு ரொம்ப சந்தோஷம், உங்களதும், உங்கள் குருதேவரினதும் ஒத்துழைப்புக்கு. இந்த உதவிக்கு ஏதாகிலும் கைம்மாறு செய்ய விரும்புகிறோம். உங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவியுங்கள்!" என்றான் தளபதி பிரெடிரிக்.

"அதற்கென்ன சார், அவசரம் இப்போ. இந்த தேசத்தை இன்னமே வெள்ளைக்காரவங்கதான் ஆளுவாங்கன்னு எங்க சாஸ்திரம் சொல்லுது. அதுவுமல்லாமே நீங்களும் 'ஆர்யன்ரேஸ்' நாங்களும் ஆரிய இனம். இனம் இனத்தோடேன்ன மாதிரி நீங்க வர நாங்க ஒத்துழைச்சோம். இது ஒரு பெரிய காரியமா என்ன! ஆனா மத விஷயத்திலே ஒங்களுக்கும் எங்களுக்கும் வித்தியாசம் நிறைய இருக்குது சார். எங்கள் தர்மத்தைக் காக்க எங்கள் மத விஷயங்களில் மத்தவங்க தலையிடாம இருக்கணுங்கிறது, எங்க ஆரிய பட்டரோட 'அபிலாஷை'. அந்த உரிமையை நீங்கள் அளிக்கணும் சார். முக்கியமா எங்க சாஸ்திர புத்தகமெல்லாம் சரசுவதி மகால்லே இருக்குது. அதை ஒங்க சேனைகள் தொடாம இருக்க ஒரு உத்திரவு எழுதிக் கொடுக்கணும் சார்"

"இதுதானா பிரமாதம். ஒன்னு எழுதிக் குடப்பா, கன்னிங்" என்றான் ஆங்கிலத் தளபதி.

அறிவை அடிப்படையாகக் கொண்டு வாழ்வை அமைத்திருக்கும் நாட்டினரிடமிருந்தே தங்கள் புளுகு சாஸ்திரங்களுக்குப் பாதுகாப்பு உறுதி பெற்றுக்கொண்ட பூணூல் மார்பினர் பூரித்துப்போயினர். மேலும், வரப்போகும் ஆட்சியாளருக்குத் தங்கள் வாழும் நாட்டைக் காட்டிக்கொடுத்து ஆதரவைப் பெற்று விட்டபடியால் இனித் தங்கள் வாழ்வு வாட்டமுறாது என்று எண்ணி எண்ணி இறுமாப்பு எய்தினர்.

அதே போழ்து நாட்டினர், மன்னன் போக்கைக் குறித்துக் கேவலமாகப் பேசினர்,

"என்னாண்ணே, ராஜாவே, வரவேத்தாராமே வணங்கி, வணங்கி வெள்ளைக்காரப் படைங்களே, இவனென்னமராட்டியன்தானா?"

"அட, வரவேக்காமே, என்னப்பா செய்வதாம். அவர் மேலே குத்தமில்லை. அரமனை அடப்பக்காரன் என் மச்சான் இருக்கானே, அவன் சொன்னான். ஆரியப்பட்டன் தான் சண்டைக்கு போகவாணாம். தொளசியைத் தூவினா, எதிரி பைத்தியம் பிடிச்சு ஓடிடுவான்னானாம். அதைக் கேட்டுக்கிட்டு ராஜா தொளசியைக் கூடை கூடையாக் கொட்டச் சொன்னாராம் கோட்டை வாசல்லே. வெள்ளைக்காரன் குதிரையா அதைச்சட்டை பண்ணும். நேரா நுழைஞ்சிட்டானுகளாம் வெள்ளைச் சிப்பாய்கள். உள்ளே நுழைஞ்சப்பறம் ராஜா என்ன பண்ணுவார். அவரே அவங்களை வரவேத்து நல்ல பிள்ளையாயிட்டாராம். என்னமோ பெரிய இடத்து சங்கதி. வெளியே சொல்லாதே"

"அப்படியே நுழைஞ்சிட்டாக்க கடைசி வரைக்கும் சண்டை போட்டுல்லண்ணே பாக்கணும். முடியாட்டி உசிரை விட்டுடணும். நம்ப சோழ ராஜாக்கள்ளாம் இப்படி நடந்துகிட்டதில்லே"

"ஆமாந்தம்பி. எல்லோருமே அப்படி இருப்பாங்களா, மராட்டியிலேதான் எடுத்துக்கொள்ளேன். சிவாஜி என்ன சாதாரண வீரனா. அவன் பேரைக் கெடுத்துட்டான் இந்த சரபோஜி"

இது நாட்டு மக்கள் உள்ளப் படப்பிடிப்பின் ஒரு பகுதி.

அதே போழ்து கோழையென நாட்டு மக்களால் தூற்றப்பட்ட சரபோஜிக்கு சிலை ஒன்றை நிறுவ அக்கிரகாரம் ஆலோசித்துக்கொண்டிருந்தது.

"கல் சிலை என்ன ஓய்! தங்கத்தாலேயே கூட சிலைசெய்துவைக்கலாங்காணும். நம்ம சுவடிகளே சேகரிக்க 60000 பவுன் செலவு செய்தாரே புண்ணியவான்! அதுக்கு விசுவாசமா இதுகூட செய்யக்கூடாதா?"

"விசுவாசம் கிடக்கட்டும், விசுவாசம். அவ்வளவு ஆதரவு கொடுத்த அரசனை வெள்ளைக்காரன் கால்லே கட்டிப்புட்டோமே,

(தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க)

ராஜா முத்தை... நூலக அறக்கட்டளை

ஓ. எம். சுப்பிரமணியன்

# இந்துஸ்தான் முழுவதும் லஞ்ச ஊழல்!

## ஊராள்வோருக்கு ஒழுக்கக்கேடு பரம்பரை யுரிமையா?

ஏறத்தாழ ஓராண்டுக்குமுன் ஜெய்ப்பூர் காங்கரஸ் மாநாட்டில் சில கதர் வாலாக்களான காங்கரஸ்காரர்கள், காங்கரஸ் ஆட்சியில் லஞ்சமும் நாணயக்கேடு மிருப்பதாகக் கண்டித்து ஒரு தீர்மானம் கொண்டுவந்தனர். இத்தீர்மானத்தைக் கொணர்ந்தவர்கள் தங்கள் கட்சியை கேவலப்படுத்துவதாகக் கருதவில்லை. அவர்கள் சாதாரணமாக நாட்டு மக்களுடைய கருத்தையே தெரிவித்தார்கள். அவர்களோ பிரதமர் ஜவஹர்லால் நேருவினுடைய சர்க்காரை இழிவுபடுத்திக் கேவலப்படுத்துவதாக அப்போது அவர் கோபத்திற்கு ஆளானார்கள். தலைவர் மிரட்ட அஹிம்சாவாதிகள் பின் வாங்கினர்.

இப்பொழுது அண்மையில் டேராடூனில் நடந்த காங்கரஸ் கூட்டத்தில், அதே தோழர் பண்டித நேரு அவர்கள், ஒழுங்கீனம் என்பது உலகப் பெரும்போரின் உற்பத்தி என்பதாகக் கண்டுபிடித்துள்ளார். "இந்தியாவில் நாணயக் கேடு, (ஊழல்) அவ்வளவு அதிகமாக—மக்கள் கூக்குரலிடவேண்டிய அளவு இல்லை" என்பதாகவும் அறிவித்துள்ளார்நன்குணர்ந்த பிரதமர் அவர்கள்.

அவர் ஜெய்ப்பூரில் (மகாநாட்டில்) கைக்கொண்ட போக்கிலிருந்து முன்னேற்றமானதுதான் இந்த அறிவிப்பு என்று சொல்லவேண்டுமாயினும், இன்னும் பிரதமரவர்கள் இந்தியாவிலுள்ள நாணயக் கேட்டின் மவுனச் சதிக்கு உடந்தையாக இருக்கிறாரென்றே தோன்றுகிறது.

அய்யத்திற் கிடமற்ற வகையில் நாணயமிக்க மற்றொருதலைவரான தோழர் ராஜேந்திர பிரஜாத் அவர்களோ, ஒழுக்கக்கேடு மிகவும் உச்சநிலையை யடைந்துவிட்டது என்பதை, முதலில் ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால் மிக மிக அண்மையில் டெல்லி அரசியல் மாநாட்டில் அவர் தலைமை தாங்கிய போதோ 'நாணயக்கேடு' அதன் உச்ச நிலையை எய்தியிருப்பதாகவும், அதனைத் தடுத்தொழிக்க வேண்டுமென்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

காங்காஸ் ராஜ்ஜியத்தில், ஊழல் குறைகளும் மலிந்திருப்பதை எடுத்துக் கூறிய பெருமை, காங்கரஸ் முன்னணியின் முதல் வரிசையிலுள்ள தோழர் ஆச்சாரிய கிருபாளனிக்கே யுரியது. "கடைவீதி சந்தை ஆகிய எங்கு பார்த்தாலும், ராஜ்ஜியம் புரிவோரின் நிர்வாக ஊழலைப்பற்றிப் பேசப்படுவதைத் தான் கேட்கப்படுகிறது" என்று அவர் விளக்கினார். தாம் கூறிவந்த இக் குற்றச் சாட்டுகளை அவர் டேராடூன் மாநாட்டிலும் மீண்டும் வலியுறுத்தினார்.

தோழர் கிருபாளனி அவர்கள் முதலில் பேசியபோது, தம்முடைய கட்சி மக்களின் ஒழுங்கைப் பற்றிக் கவலையற்றிருந்த தோழர் பட்டாபி சீதாராமையா அவர்கள் இதைப்பற்றி எண்ணத் தலைப்பட்டார். இவ்வாறு பேசிவந்ததின் விளைவாக, தோழர் கிருபளானி அவர்கள், ஒருகாலத்தில் தாம் பெருமிதத்துடன் தலைமைவகித்த கட்சியிலிருந்து அரசியல் அக்ஞாதவாசம் புரியவேண்டியவரானார்.

இதனால் "தற்போதைய காங்கரஸ் தலைவர் சென்னை மந்திரிமார்களின் வெளிப்படையான நாணயக் கேட்டைப்பற்றிய காரியங்களில் ஈடுபட வேண்டியவரானார். காங்கரசின் பொதுச் செயலாளரான தோழர் சங்கரராவ் தேவ் அவர்களை விசாரணை செய்ய அனுப்பினார். காங்கரசின் மற்றொரு கூட்டுச் செயலாளரான தோழர் காளா அவர்களே இந்தக் குற்றச் சாட்டுகளுக் குள்ளான குற்றவாளிகளில் ஒருவர் ஆவார்!

கிழக்குப் பஞ்சாப் சட்டசபைக் கூட்டத்தில் ராஜினாமாச் செய்த தோழர் கோபிசந்த் பார்க்கவாவின் நிர்வாகத்தின் மீது, சென்ற ஏப்ரல் மாதத்தில் வெளிப்படையாகக் குற்றம் சாட்டப்பட்டது. நீதி இருப்பதைக் காட்டிக்கொள்வதற்காக "உண்மையான பெருங்குற்றவாளிகளுக்கு முழு வசதியிருக்க, சில சிறிய குற்றங்களின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" என அப்போது விமர்சகர்களால் அந்நிகழ்ச்சி விளக்கப்பட்டது.

அதே மாகாண சர்க்கார் ஜூன் மாத இறுதியில் ஒரு பெருத்த இரும்புக் கள்ளமார்க்கெட் விவகாரத்தில் சிக்கிக்கொண்டது.

மோசடி ஸ்தாபனங்கள் சர்க்காருடன் பதிவு செய்யப்பட்டு, அவைகளுக்கு கோட்டா வழங்கி, சாமான்களும் கொடுக்கப்பட்டுள்ளன. அந்த சாமான்களை அவை அடுத்த மாகாணங்களுக்குக் கொண்டு சென்றன.

பீகாரில் ஒரு சர்க்கரைப்பாகு வதந்தி பரவிவருகிறது. பெரிய சர்க்கார் அதிகாரிகளின் உறவினர்களுக்கும் காங்கரஸ் அதிகாரிகளுக்கும் பீகாரிலுள்ள சர்க்கரை ஆலையில் சர்க்கரைப் பாகு வாங்கப் பெர்மிட்டுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் பின் அந்தச் சர்க்கரைப் பாகு கள்ளச் சந்தைக்குச் செல்வதாகவும் நம்பப்படுகிறது.

முக்கியமாக சென்னை சட்டசபையிலுள்ள பிளவுகளின் காரணமாக, சென்னையிலிருந்து எல்லாவற்றிலும் மிக ருசிகரமான ஊழல் கள்பற்றிய புகார் வந்துள்ளது. மே மாத 11-தேதிய 'மார்ச்' இதழின் பின்புறத்தில், காங்கரஸ் தலைவருக்கு 24-சட்டசபை உறுப்பினர்கள் கையெழுத்துச் செய்து, 33 பக்கம் கொண்டதாய் அனுப்பிய குற்றச்சாட்டுகளை அடிப்படையாகக் கொண்டு சென்னை'அம்பலப்' படுத்தப்பட்டது. ரெட்டியார் மந்திரிசபையில் டையசல் மோட்டார்கள் சம்பந்தமாகக் கையாளப்பட்ட வழவழா போக்குகளும், நிரந்தர ஊழியர்களின் ஒழுக்கக் கேடுகளும், மற்றும்பல தகாத செய்கைகளும் குற்றச்சாட்டுகளில் முக்கியமானவைகளாகும். அதே 'மார்ச்' இதழில் 'சுதந்தரா' ஆசிரி

யர் வெளியிட்டிருந்த உண்மையும் வெளியாக்கப்பட்டிருக்கிறது. அந்தச் செய்தியில், சர்க்கார் நிதி மந்திரியாரால், நிதிமந்திரியின் சகோதரர், பங்காளி, மைத்துனர், சகோதரர் மைத்துனர், மற்றும் இரண்டு கூட்டு மாப்பிள்ளைகள் ஆகியோரை போர்டு டைரக்டர்களாகக் கொண்டுள்ள ஒரு தாவர எண்ணெய் பாக்டரிக்கு பத்துலட்ச ரூபாய் கடனாக வழங்கப்பட்டதை விளக்கியுள்ளது.

இது வெளிப்பட்டபின் நிதிமந்திரியார் தம் கபட மற்ற தன்மையைக் காட்டிக்கொள்ள மற்றும் பல ஸ்தாபனங்களுக்கு அவசரமாக கடன் கொடுத்திருக்கிறார்.

குற்றச்சாட்டுக் குள்ளாகி குற்றவாளிகள் ஆகியிருக்கும் ஆறு மந்திரிகள், தத்தம்மீது சாட்டப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகளுக்கு, தங்களுக்குமுன் இந்தப் பதவியிலிருந்தவர்களும் இதே ஊழல்களைக் கைக்கொண்டிருந்ததாகக் கூறி, வெட்கங்கெட்ட முறையில் சமாதானம் கூறியுள்ளனர். இந்த மந்திரிகள் இத்தகையஊழல்களை, தங்களுடைய அதிகார பரம்பரைச் சொத்தாக, நாணயமற்ற முகத்துடன் கைக்கொள்வது போல் தெரிகிறது.

தோழர் பட்டாபி சீதாராமையா தமது "அசைந்து கொடுக்கும்" முறையைக் கை விட்டு, விசாரணைக்கு உத்திரவிட வேண்டியவரானார். அதனால் சென்ற மாதம் குற்றச் சாட்டுகளை விசாரிக்கத் தோழர் தேவ் அங்கு சென்றார்.

முன்னாள் சென்னைப் பிரதமர் தோழர் டி. பிரகாசம், தோழர் தேவ் சேகரித்திருக்கும் செய்திகள் "குற்றச் சாட்டுகளைத் தாக்கீது செய்தவர்களை விட்டொழித்து விட்டு, ஒருதலைப்பட்சமாகச் சேகரித்தவையாகும்" என்கிறார். மேலும் தம் கூற்றை மெய்ப்பிக்கப் பல நிகழ்ச்சிகளையும் அவர் எடுத்துக் காட்டியுள்ளார்.

இந்த விசாரணைக்குச் செயற்குழு உத்திரவிட்டதிலிருந்து, மக்களைக் கண் துடைக்கச் செய்ய வேண்டுமென்பது புலனாகிறது. பொது மக்களின் அபிப்பிராயத்துக்கு, காங்கரசாரின் தகாத செய்கைகளை வெட்ட வெளிச்சமாய்க் கொண்டுவர காங்கரஸ் விரும்பவில்லை என்றே தெரிகிறது. இந்த நிலையில் காங்கரஸ் இரண்டு இடைத்தேர்தல்களில் பரிதாபகரமாகத் தோல்வி அடைந்துள்ளது. வேறு எந்தக் காரியத்தையும்விட, இந்தத் தேர்தல் முடிவுகள், ஊழல்கள் என்பது ஒழுங்கீனம் மட்டுமல்ல; மோசமானதொரு அரசியல் என்பதையும் காங்கரசுக்குக் கற்றுக்கொடுத்திருக்கிறது.

பாகிஸ்தான் முதல் மாகாணத்தில் பிரபல பிரதம மந்திரியான தோழர் குரோ, சந்தேகத்திற்காளானபோது அவரின் நடத்தை வெளிப்படையாக வழக்கு மன்றத்தில் விசாரிக்கப்பட்டது. முஸ்லீம் லீக் கட்சியானது, அதன் பொதுச் செயலாளரை, அவர்மீதுள்ள குற்றச்சாட்டுகளை விசாரிக்க அனுப்பவில்லை. பாகிஸ்தானின் தலைசிறந்த அதிகாரிகள் தோழர் குரோவை விசாரிக்க உத்திரவிட்டார். குரோ விசாரிக்கப்பட்டார்.

இதே போன்றுதான் 'பெல்ச்சர்' வழக்கிலும் தொழிலாளர்சர்க்கார், வெளிப்படையான விசாரணையையே கைக் கொண்டது. பல நாடுகளில் சர்க்கார் வேறு, கட்சி வேறு என்றே கருதப்படுகிறது. ஆனால் காங்கரஸ் கட்சியோ சர்க்காருடன் தன்னையும் இணைத்துக் காட்டிக் கொள்ள விரும்புகிறது. 'பெல்ச்சர்' விசாரணையில் அட்டர்னி ஜெனரலான சர் ஹார்ட்லி ஷா கிராஸ், "பொது வாழ்வின் தரத்தில் நாணயமும்ஒழுங்கும் மிக உயர்ந்துள்ளது...எந்த ஒருமந்திரியேனும் அந்தத் தரத்திலிருந்துதுறைவுபடுவாரானால் அது ஒவ்வொரு கட்சியையும், ஒவ்வொரு பிரஜையையும் பாதிப்பதுடன்—ஒவ்வொரு கட்சியும், பிரஜையும் துன்பப்படவும் நேரும் காரியமாகும்.

மந்திரிகளின்மீது குற்றம் சாட்டப்பட்டால்---பகிரங்கவிசாரணையை அரசாங்கமே நடத்த இந்தியப் பிரதம மந்திரி உத்திரவிட்டிருக்க வேண்டாமா? மந்திரிமீது குற்றம் சாட்டப்படுவது அரசாங்க காரியமே தவிர (அதாவது அரசாங்கத்தின்மீது குற்றச்சாட்டே தவிர) ஒரு கட்சியின் அக்கரையைப் பொருத்ததல்ல.

சமீபத்தில்விஜயவாடாவில்நடைபெற்ற ஆந்திர மாகாணக் காங்கரஸ் கமிட்டிக் கூட்டத்திலும் தற்போதைய மந்திரிசபையைக் குறை கூறியும்—மத்திய அரசாங்கம் நீதிபதிகளை நியமித்து சென்னை மந்திரிகளின்மீது சாட்டப்பட்ட குற்றங்களை விசாரிக்க உத்திரவிட வேண்டுமென்றும் தீர்மானம் செய்திருக்கிறது.

ஒழுக்கக்கேடு ஆரம்ப தசையிலிருந்தபோது காங்கரஸ் மேலிடம் அதை மறைத்துவைக்க முயன்றது. காங்கரஸ் கட்சி தனது பெருமையைக் காப்பாற்றிக்கொள்வதற்காக—அவிவேகமான முறையில் ஒழுக்கக் கேட்டுக்கு மூடி போட்டதன் விளைவே—இன்று ஒழுக்கக்கேடு உச்ச நிலையை அடையக் காரணமாகும்.

காங்கரஸ் காரியக்கமிட்டி ஜுலை 15-ந் தேதி சென்னை ஒழுக்கக்கேட்டைக் குறித்த தேவ் அறிக்கையைக் குறித்து ஆலோசிக்கும். அறிக்கைஒருவேளைபட்சபாதமற்றதாகஇருப்பினும், அவ்வளவு முக்கியமானதாகஇருக்கமுடியாது. காங்கரஸ்என்னசெய்யப்போகிறது என்பதிலேயே முக்கியத்துவம் இருக்கிறது.

ஒழுக்கக் கேட்டைக் குறித்து மெதுவாகக் காங்கரஸ் தலைவர்களும் இன்று ஒப்புக்கொள்கிறார்கள். அதனோடு அவர்கள் வெட்கத்துடன் மேலும் போராடிக் கொண்டிருக்க முடியாது. ஆத்திரமான நடிப்புகள் உண்மையை மாற்றமுடியாது. ஆயுத சன்னத்தரான மிகச் சில பழந் தோழர்களால் மேலிழுக்கப்படவேண்டும். அவர்கள் அப்படிச் செய்யத் தவறின் காங்கரசுக்குமிச்ச மீதி இருக்கும் சிறு செல்வாக்கும் அடியோடு அழிந்துவிடும்.

காங்கரசின் முடிவை வரையறுக்கும் காலம் இந்த மாதமே.

—'மார்ச்'

## இன்பத் திராவிடத்திற்கும் தடை!

தோழர் நா. ரா. நாச்சியப்பனால் எழுதப்பட்டு, துறையூர் எரிமலைப் பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்ட 'இன்பத் திராவிடம்' என்ற நூலை, வகுப்புத்துவேஷப் பாடம் படித்து, சென்னை சர்க்கார் பறிமுதல் செய்திருக்கிறார்கள்.

# — சாக்ரடீஸ்! —

★

சிறிது குள்ளமான உருவம்; உயர்ந்தகன்ற நெற்றி; சப்பையான மூக்கு; பிதுங்கிய கண்கள், பருத்த உதடுகள்; குள்ளமான கழுத்து; களங்கமற்ற முகம். இவைகள் தான் சாக்ரடீசின் வெளித்தோற்றங்கள்.

ஆம்; உலகம் வியக்கும் பெருங் கவி ஹோமர் (Homer), தத்துவ நூற்களில் தலைசிறந்த பிளாடோ (Plato), இன்றும் விஞ்ஞானத்தின் தந்தையென அழைக்கப்படுகிற மேதை அரிஸ்டாடில் (Aristotle), கணிதத்தில் நிபுணரான யூக்ளிட் (Euclid), பெரும் சொற்பொழிவாளரான டெமாஸ்தனிஸ் (Demosthenes) முதலியவர்களை ஈன்ற கிரேக்க நாடுதான் சாக்ரடீசையும் உலகிற்கு அளித்தது.

சாக்ரடீஸ் ஆதன்ஸ் (Athens) நகரில் பிறந்தார். அக்காலத்தில் ஆதன்ஸ் நகரம் கிரேக்க நாட்டின் தலைசிறந்த நகரமாகவும், அருங்கலைகள் அனைத்திற்கும் உறைவிடமாகவும், அட்டிகா (Attica) நாட்டின் தலைநகராயும் திகழ்ந்து வந்தது. சாக்ரடீசின் தந்தையின் பெயர் சோப்ரானிஸ்கஸ் என்பதாகும். அவரின் தாயார் பானரீடு என்று பெயருடையவளாவள். சோப்ரானிஸ்கஸ் சித்திரத்தொழில் செய்து வாழ்ந்து வந்தார். ஆகையால் சாக்ரடீஸ் ஏழைக் குடியில் பிறந்தவர் என்பது சொல்லாமலே விளங்கும்.

இளமையிலேயே சாக்ரடீஸ் பள்ளிக்குச் சென்று இன்னிசை, உடற்பயிற்சி முதலியவைகளைப் பயின்று வந்தார். கணித, வான நூல்களில் இவருக்கும் பயிற்சியுண்டு. இளமையிலேயே இவர் சிந்தனையாளராக விளங்கினார். அப்பொழுதே அவருக்கு மக்களிடம் குடிகொண்டுள்ள மூட நம்பிக்கை, பகுத்தறிவின்மை, இழிந்த குணம் முதலியவைகளை எப்படியும் அகற்றவேண்டுமென்ற எண்ணம் தோன்றலாயிற்று.

சாக்ரடீஸ் தனது வாழ்நாள் முழுதும் எளிய வாழ்க்கையே நடாத்திவந்தார், தனது கொள்கைகளைப் பரப்புவதிலேயே சாக்ரடீஸ் தனது வாழ்நாள் முழுவதும் பாடுபட்டார். அவர் பயன் நோக்காது மக்களுக்குப் பாடுபட்ட உத்தமர்.

தனது கொள்கைகளைப் பரப்ப சாக்ரடீஸ் பள்ளிகள் நிறுவவில்லை. கூட்டங்கள் கூட்டிப் பிரச்சாரம் செய்யவில்லை. தன்னிடம் பேச வருபவர்களிடம் தனது கொள்கைகளை விளக்கினார் சாக்ரடீஸ்; அவ்வளவுதான். அவர் பேச்சிலே இனிமை கலந்திருந்தது. அவர் பேச்சிலே நகைச்சுவை மிளிர்ந்தது. அவர் பேச்சிற்குமக்களைத் தன்பால்ஆர்க்கும் சக்தி இருந்தது. ஆதலால் மக்கள் அவருடன் உரையாடுதற்கும், அவருடைய கொள்கைகளை நன்றாகத் தெரிந்துகொள்வதற்கும், அவரைச் சுற்றித் திரள் திரளாகக் கூட ஆரம்பித்தனர். நாளுக்கு நாள் பொதுமக்களிடம் சாக்ரடீசின் புகழ் பரவ ஆரம்பித்தது. ஆனால் அதே சமயத்தில் மதக் குருக்களும், முற்றும் கற்றுணர்ந்தவர்கள் எனக் கூறிக்கொண்டவர்களும் சாக்ரடீசை எதிர்க்க ஆரம்பித்தனர்.

சாக்ரடீஸ் வாழ்ந்த காலத்தில் கிரேக்கர்கள் அநேக தெய்வங்களை வணங்கிவந்தனர். மேலும் அவர்கள் மூட நம்பிக்கைகள் பலவற்றினுக்கும் அடிமையாகவிருந்தனர்.

“நீங்கள் வணங்குகின்றீர்களே தெய்வங்கள், அவைகள் உங்கள் வணக்கத்திற்கு தகுதி வாய்ந்தவைகளன்று. உங்களைப்போன்ற மனிதர்கள் சிருஷ்டித்ததுதான் அந்தக் கடவுள்கள்! அவைகளை நீங்கள் வணங்குவதில் என்ன அர்த்தம் இருக்கிறது?

இப் பரந்த வெளியில் மனிதனின் வணக்கத்திற்கு உகந்த பொருள் ஒன்று உண்டு. அதுவே இறைவன் எனப்படும். அந்த இறைவன் பூமியின்கண் உள்ள எல்லாப் பொருள்களைக் காட்டிலும் கூற இயலாத அளவு மேம்பட்டவனாவன். அவன் நீங்கள் வணங்குகின்ற கடவுள்களைப் போன்று மிருக குணம் படைத்தவனல்லன்; கெட்ட குணங்களை உடையவனுமன்று. அவன் மனிதனின் காரியங்களிலே தலையிடமாட்டான். அவன் உன்னத இயல்புகளை உடையவன். அவன் ஆதியும் அந்தமும் உருவமும் இல்லாதவன். உண்மைதான் கடவுள் என நீங்கள் கூறலாம். அன்புதான் இறைவன் என்றும் நீங்கள் சொல்லலாம். அழகுதான் இறைவன் என்றும் நீங்கள் புகலலாம். ஆனால் எச்சொல்லும் அந்தஉன்னத இறைவனின்முழுத் தன்மையை வெளிபிடமுடியாது. மக்கள் நல்லவர்களாக வாழவேண்டுமெனில் அந்த இறைவனை அவர்கள் வணங்கி வாழ்தல் வேண்டும். அதாவது அவர்கள் உண்மைதான் பேசவேண்டும். அழகைக் கண்டு ஆனந்தம் அடைதல் வேண்டும்; பிறரிடத்தில் அன்பு செலுத்துதல்வேண்டும். அறிவுள்ளமனிதன் பணம் சேர்ப்பதைப்பற்றி எண்ணலாகாது, அவன் அழகிய ஆடைகளை அணியவேண்டுமென்றோ பெரிய இல்லங்களில் வாழவேண்டுமென்றோ எண்ணலாகாது. மனிதன் நன்றாக எதையும் சிந்திக்க வேண்டும். சிந்தனை அவனை உயர்த்தும்.’’

இவைகளைத்தான் சாக்ரடீஸ் கூறினார். இதைக் கேட்டுச்சீறி எழுந்தனர் கடவுள்களைக்காட்டி உல்லாச வாழ்வு வாழ்ந்துவந்த குருமார்கள். தங்களை மேதாவிகள் என்று கூறிக்கொண்டு நாட்டிலே உலவி வந்தவர்களும் சாக்ரடீசை எதிர்க்க ஆரம்பித்தனர். சாக்ரடீசை நாஸ்திகன் என்று மக்களிடம் அவர்கள் பிரச்சாரம் செய்தார்கள். கடவுள்கள் இல்லையென்று கூறிவரும் சாக்ரடீசை சும்மா விடக்கூடாது என்று அவர்கள் துள்ளி விழுந்தார்கள். எதிர்ப்பைக்கண்டு சாக்ரடீஸ் அஞ்சினாரல்லர். எப்பொழுதும் போன்றே தனது கொள்கைகளை மக்களுக்கு அவர் எடுத்துரைத்து வந்தார்.

தன்னை நாஸ்தீகன், கடவுள்கள் இல்லையென்க்கூறும் கயவன் என்றெல்லாம் நாட்டிலே பிரச்சாரம் செய்தவர்களை நோக்கி, “நாம் தக்க காரணங்களைக் கொண்டே ஒவ்வொரு காரியங்களையும் தப்பு அல்லது சரி என

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)

# குடி அரசு

16—7—49 சனிக்கிழமை.


# பெரியார்—மணியம்மை திருமணம்

★

பெரியார்—மணியம்மை திருமணம் 9—7—49பிற்பகல்3-30க்கு சென்னையில் ஜில்லா திருமண ரிஜிஸ்டரார் முன் சட்டப்படி முறைப்படி நிறைவேறி விட்டது.

பெரியார் வயது 70. மணியம்மை வயது 31. பெரியார் பிறந்தது பிரமாதி ஆண்டு புரட்டாசித் திங்கள் 2-ம் தேதி. மணியம்மை பிறந்தது சித்தார்த்தி ஆண்டு மாசி திங்கள் 27ம் தேதி.

மணியம்மை இயக்கத் தொண்டுக்கு ஆகவும் பெரியார் பாதுகாப்புக்கு ஆகவும் என்று கருதி தனது வீட்டாரிடம் அனுமதிபெற்று வீட்டாராலேயே அனுப்பப்பட்டு, பெரியாரிடம் வந்து சேர்ந்து இன்றைக்கு 6-ஆண்டுகள் பூர்த்தியாகி விட்டன. மணியம்மை பக்குவமடைந்து இன்றைக்கு 17-ஆண்டுகள் ஆகின்றன.

மணியம்மையின் தந்தையார் காலமாகி இன்றைக்கு 6 ஆண்டுகள் ஆகின்றன. மணியம்மையாரின் தந்தையார் இருக்கும்போதே மணியம்மை பக்குவம் அடைந்து, 10-ஆண்டுகளுக்கு மேலாகவே தந்தையார் வீட்டில் திருமணப் பேச்சே பேசப்படாமல் இயக்க உணர்ச்சிப் பேச்சே பேசப்பட்டு, தந்தையார் தன் மகளை இயக்கத் தொண்டே செய்துகொண்டிருக்க ஆசைப்பட்டு விட்டு இருந்தவர்.

மணியம்மை திருமணத்தைப் பற்றி யாராவது தந்தையாரைக் கேட்டால், அவர், சுயமரியாதை இயக்கக் கருத்துப்படி "அதைப் பற்றி நாம் ஏன் பேசவேண்டும், அதன் இஷ்டப்படி அது எப்பொழுதோ யாரையோ திருமணம் செய்துகொள்ளட்டும், நமக்கு ஏன் அந்தக் கவலை" என்று சொல்லி விடுவார்.

மணியம்மையை யாராவது திருமணம்பற்றிக் கேட்டாலும் "உங்களுக்குச் சிறிதுகூட நாகரீகம் தெரியாதா? உங்களுக்கு ஏன் இந்தப் பேச்சு? உங்கள் வேலையைப் பாருங்கள்" என்று தனது 16, 17வது ஆண்டுகளிலேயே சொல்லிவிடுவது வழக்கம்.

இந்தப்படியே சொல்லி வந்து இன்றைக்கு தனது 31-வது ஆண்டு வரையிலும், பூப்பெய்தி 17-கடக்கும் வரையிலும் திருமணத்தைப் பற்றிய கவலையும், பேச்சும் இல்லாமல், பெரியார் நலம் பேணுவதையே தனது வாழ்க்கைத் தொண்டு, வாழ்வின்பயன் என்று கருதி இந்த ஆறுஆண்டாக பெரியாரிடம் இருந்து பற்றுடன் ஏவல் செய்து கொண்டிருந்து வந்திருக்கிறது.

மணியம்மையின் யோக்கியதாம்சம் என்னவென்றால் அது S. S. L. C. வகுப்பில் இரண்டு ஆண்டுகள் படித்ததாகும். முதல் ஆண்டு பரீக்ஷைக்குப் போகாததற்குக் காரணம் உடல் நிலை மிக்க காயலாவுக்குள்ளாகி போக முடியவில்லை. இரண்டாம் ஆண்டு பரீக்ஷை காலத்தில், தந்தையார் உடல்நிலை கடினமான காயலாவுக்குள்ளாக, தந்தைக்கு அருகிலிருந்து தொண்டு செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டுப் போக, முடியாததாகி விட்டது.

தந்தையார் காலமாகி ஒருமாதத்திலேயே அதாவது 1943 ஜூலையில், மணியம்மை பெரியாரிடம் சேர்ந்தது என்றாலும், சில நாளிலேயே பெரியார் மணியம்மையைத் தமிழ் படிப்பதற்கு ஆக குலசேகரபட்டினத்திலுள்ள C. D. நாயகம் அவர்களது தமிழ் காலேஜுக்குத் தமிழ் படிக்க அனுப்பி விட்டார். அங்கு தமிழ் பிரவேச பண்டித பரீக்ஷைக்குப் படித்துக்கொண்டே C. D. நாயகம் அவர்களுடன் திருநெல்வேலி ஜில்லாவில் பிரசாரத்துக்குச் சென்று ஒரு மணிக்கு மேலாகப் பேசி பிரசாரம் செய்து வரும்.

கடைசியாக மணியம்மை சர்க்கார் பரீக்ஷைக்கு எழுதுவதற்கு ஆக மதுரைக்கு வந்து பரீக்ஷை சீட்டு வாங்கிக் கொண்டு பரீக்ஷை மண்டபத்துக்குப் போய்க்கொண்டிருக்கையில், மணியம்மையின் நெருங்கிய உறவினர் ஒருவர், மதுரைக்கு வந்திருந்தவர், மணியம்மையைத் தனித்து வந்து விட்டதாகக் கருதி மணியம்மையை நடக்கவிடாமல் தடுத்துபிடித்துக்கொண்டு வேலூருக்கு வரும்படி அழைத்தார். மணியம்மை என்ன சொல்லியும் அவர்விடவில்லை. போலீசார் ஸ்டேஷனுக்கு இருவரையும் அழைத்துச் சென்றுவிட்டார்கள். அங்கு சப் இன்ஸ்பெக்டர் இருவரையும் விசாரித்து, மணியம்மை கையில் இருந்த பரீக்ஷை ஆதாரங்களை, பிரவேச சீட்டை, பணம் கட்டின ரசீதை எல்லாம் பார்த்து பரீக்ஷை அறைக்குப் போகும்படி கான்ஸ்டேபிளுடன் அனுப்பிக் கொடுத்தார். அதற்குள் பரீக்ஷை துவக்க நேரம் தாண்டி விட்டதால், பரீக்ஷை மண்டபம் கதவு மூடப்பட்டு விட்டது. திரும்பி ஈரோடு வந்து சேரவேண்டியதாகி விட்டது. என்றாலும் தமிழில் ஒரு அளவுக்குப் பயிற்சி உண்டு.

பெரியாரது மனைவி நாகம்மையார் 1933ம் ஆண்டு முடிவெய்தி விட்டார். இன்றைக்கு 16 ஆண்டுகள் ஆகின்றன. 16 ஆண்டுகளாகவும் அதற்குமுன் 13 ஆண்டுகளாகவும் பெரியார் தனது வியாபாரம், குடும்பம், எஸ்டேட்டு ஆகிய நிர்வாகம் எதையும் கவனியாமல், விட்டு விட்டுப் 30-ஆண்டாக பொதுத்தொண்டு என்னும் பேரால் சதா பிரசார வேலையிலேயே ஈடுபட்டு வருகிறார். அவர் தலைவரானாலும்கூட பேர்தான் தலைவரே ஒழிய அவரது நேர்வேலை பிரசார வேலையாகவே இருந்து வந்திருக்கிறது.

அவருக்குக் குழந்தை இல்லாத காரணத்தால் அவரது 32-வது ஆண்டு முதல் அவரை மற்றொரு மனைவியை மணம் செய்துகொள்ளும்படி தாய், தந்தை, தமையனார்

ரான பெரியார் கிருஷ்ணசாமிஆகிய வர்களும் மனைவி நாகம்மையும் கூட தூண்டி வந்தார்கள். நாகம்மையார் காலமான 1933ம் ஆண்டில் பெரியாரின் தாயார், பெரியாரைத் திருமணம் செய்து கொள்ளும்படி கட்டாயப் படுத்திவந்தார். அப்போது பெரியாருக்கு வயது 54, அல்லது 55 இருக்கும். அப்போது உத்தேசிக்கப்பட்ட பெண் எதுவென்றால் பெரியாரின் தங்கை கண்ணம்மாள் மகள் இராஜாத்தி. அதற்கு வயது சுமார் 17 அல்லது 18 இருக்கும். 6-வது பாரம் படித்துக் கொண்டிருந்ததாக ஞாபகம்.

அப்போது பெரியார் சொன்னது என்னவென்றால், "பொதுத் தொண்டுக்கு அனுகூலமாக இருக்கும் பொருட்டே என் மனைவி இறந்துவிட்டதாகக்கருதி மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறேன். அப்படியிருக்க எனக்கு மனைவிச் சனியன் ஏன்" என்று சொல்லி விட்டார்.

இதன் மத்தியில் பெரியாரிடம் நெருங்கி அன்பு காட்டிப் பழகி வந்த பெண்கள், தாய்மார்கள் கணக்கிலடங்காது. காலம், நேரம், இடம் எதுவும் கவனிக்கப்படாமல் அவரிடம் பழகிய தாய்மார்கள் கணக்கிலடங்காது. இப்படிப்பட்ட காலங்களிலும், சந்தர்ப்பங்களிலும் பெரியார் அவர்களை நடத்தினதும், நடந்து கொண்டதும் பெண்கள் உலகம் நன்றாய் அறியும்.

பல பெண்கள் தங்களை மறந்து நடந்து கொண்ட போதும், தவறான உணர்ச்சிகளைக் காட்டிக் கொண்டபோதும், அப்படிப்பட்டவர்களை ஜாடையாய் விலக்கியும், இயக்கத்தில் அலட்சியப்படுத்தி நெருங்கவிடாமல் செய்தும், தடுத்து இருப்பதோடு என்னதான் சுதந்திரக் காதல் பேசினாலும் கூடுமானவரை இயக்கத்திற்குள் காதல் பேச்சுக்கு, ஒழுக்கத்தவறானநடத்தைக்கு இடமில்லாமல் பாதுகாத்து இருக்கிறார். அதனால் பல ஆண், பெண்களுடைய அதிருப்தியைப் பெற்று இருக்கிறார்.

இயக்கத் தோழர்களிலும் அப்படிப்பட்ட நடத்தை உள்ளவர்களை கொஞ்சம் ஒதுக்கிவைத்தே நடந்து வந்திருக்கிறார்.

பெண்கள் சம்பந்தமான புகாரில் வந்தவர்கள் எப்படிப்பட்டவர்களானாலும் அவர்களை வெறுத்தே வந்திருக்கிறார்.

நபர்களைப்பற்றியும், நடத்தைகளைப்பற்றியும், அவர்களை வெறுத்ததுபற்றியும், அவர்கள் இன்றும் எதிரிகளாய் இருப்பது பற்றியும் அவசியம் வரும்போது பட்டியல் தருவார் பெரியார்.

அப்படிப்பட்ட நமது கழகத்தில் நம் பெரியாரும் மணியம்மையும் திருமணம் செய்துகொண்டார்கள் என்றால் இது காதல் திருமணமாகவோ, பொருந்தாத் திருமணமாகவோ, சீர்திருத்தத்திற்கு விரோதமான திருமணமாகவோ, இயக்கத்துக்கும் இயக்கக் கொள்கைகளுக்கும் கேடுசெய்யும் திருமணமாகவோ இருக்க முடியுமா என்பதைப் பகுத்தறிவு வாதிகள், நடுநிலைமை சுயமரியாதைக்காரர்கள், சீர்திருத்தவாதிகள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

கலவி இச்சைக்குஆக பெரியாரைப்போன்றவர்கள் பரிகாரம் தேடவேண்டுமானால் அதற்குத் திருமணம்தான் வழியா? இது சாதாரண ஆஸ்திகர்களுக்கும், அழுக்குமூட்டை வைதீகர்களுக்கும்கூட விளங்குமே! இயக்கமைனர்களுக்கு விளங்கவில்லை என்றால் யார் நம்புவார்கள்!

இது பகுத்தறிவு, சீர்திருத்தம் பேசுகிறவர்களுக்கு விளங்கவில்லைஎன்றால் இது மெய்யாய் நாணயமாய் இருக்க முடியுமா?

தவிர மணியம்மை திருமணம் பொருந்தாத் திருமணம் என்று எந்தக கருத்தில் சொல்லப்படுகிறது? "70க்கும் 30க்கும் 40-வயது வித்தியாசம் இருக்கிறது" என்பதனால்தான். இந்த வித்தியாசம் 40 ஆனால் என்ன, 60 ஆனால் என்ன, எந்த நிமிஷத்திலும் திருமணத்தை ரத்துசெய்துகொண்டு தனக்கு வேண்டிய கணவனை மணம் செய்துகொள்ள உரிமை உள்ள திருமணம்தானே இது? இன்று மணியம்மை குழந்தை அல்லவே? பகுத்தறிவும், சீர்திருத்த உணர்ச்சியும், சுயமரியாதை அறிவும் கொண்ட 30-வயது பெண் அல்லவா? அதுவிஷயம் உணர்ந்து ஒப்பித் திருமணம் நடந்திருக்கிறது என்றால் இதில் யாரை யார் ஏமாற்றி, யாரை யார் கட்டாயப் படுத்தி, யாருக்கு யார் பணம் கொடுத்து விலைக்கு வாங்கி அல்லது யார்யாருக்குச் சம்மதமில்லாமல் தூக்கி வந்து செய்து கொள்ளப்பட்ட திருமணம் என்று சொல்லக்கூடும்?

இதை ஏன் இவ்வளவு விளக்குகிறோம் என்றால் இந்தத் திருமணத்தை பகுத்தறிவு, சீர்திருத்தம், பொருந்திய மணம், சுயமரியாதை என்னும் பேரால் ஆக்ஷேபிப்பவர்களைக் கண்டு பொது மக்கள் ஏமாந்து போகாமல் விளக்கம் பெறவே தெரிவிக்கிறோம்.

இனி அடுத்தபடியாக இந்தத் திருமணத்தைக் குறைகூறும் இயக்கத் தோழர்கள் சொல்லும் குற்றம், "இயக்கத்துக்கு மணியம்மையை வார்சுஆக்குவது தகாது" என்பது.

இதை, பெரியாரின் எதிரிகள்எந்தக் காரணம் காட்டி எப்படிப் பிரசாரம் செய்து மக்களை ஏய்க்கிறார்கள் என்றால், பெரியார் மணிஅம்மையைத் திராவிடக் கழகத்துக்குத் தலைவராக ஆக்கி மகுடம் சூட்டி, அந்தம்மாள் (அந்தம்மாளை மிகக் கேவலமான சொற்களால் அர்ச்சித்து) "நமக்குத் தலைவராவதில் நமக்கு மானம் ரோஷம் வெட்கம் சுயமரியாதை இல்லையா" என்று கேட்டு ரோஷ ஸ்டீம் ஏற்றப்படுகிறது. இந்த வேலையை எடுத்துக் கொண்டவர்கள் சிறிதுகூட ஈவு இரக்கம் நேர்மை மனச்சாட்சி இல்லாமல் "மணியம்மையா நமக்குத்தலைவர்" என்று மக்களுக்குச்சொல்லும்முறையில், அநேக சங்கதிகளைப் புகுத்தி வசவு வீரர்களாகி விட்டார்கள். அது எப்படியோ போகட்டும். தங்கள் தங்கள் நிலையை, யோக்யதையை, வாழ்க்கையைப் பார்க்கும் ஓய்வு கிடைத்தால் அப்போது ரோஷக்காரர்கள் வெட்கப்பட்டே தீருவார்கள்.

ஆனால் இயக்கத் தலைமை என்பது ஒரு தனி மனிதன் சூட்டக்கூடிய வார்சு கிரமத்தில் கட்டுப்பட்டதா?

உலகத்தில் எந்த இயக்கத் தலைமை ஸ்தானமாவது அப்படி இருக்கிறதா?

பெரியார் அவரது இந்த 50 வருஷ வாழ்வில் பல தலைமை ஸ்தானத்தில் இருந்திருக்கிறார். இவற்றுள் ஏதாவது ஒன்று ஒரு தனிப்பட்ட மனிதன் வார்சு கிரமத்தில் சூட்டிய தலைமைப் பதவியாக இருக்கக்கூடுமா?

மற்றும் இன்று இந்நாட்டில்,

எத்தனையோ ஸ்தாபனங்களும் தலைமைப் பதவியும் இருந்து வருகின்றன. இவைகளில் எது யாரால் சூட்டப்பட்டதாகும்?

திராவிடக் கழகத் (ஜஸ்டிஸ் கட்சி) தலைவர் பெரியாருக்குத் தலைமைப் பதவி அவர் ஜெயிலில் இருக்கும்போது, பொப்பிலி ராஜா வீட்டில் நடந்த தேர்தலில், சென்னையில் தீவு மைதானத்தில் நடந்த மகாநாட்டுத் தேர்தலில், திருவாரூர் மகாநாட்டுத் தேர்தலில், சேலம் மகாநாட்டு தேர்தலில், திருச்சி மகாநாட்டுத் தேர்தலில் தெரிந்தெடுக்கப்பட்ட தலைவர் பதவியாகும்.

இப்படிப்பட்ட தலைமைப்பதவி பெரியாரால் மணியம்மைக்குச் சூட்டப்படப் போகிறது என்று போலி ஆத்திரமும், போலி அழுகையும் காட்டி மக்களை ஏய்த்தால், மக்கள் ஒரு நாளைக்கு ஆவது சிந்திக்கும்படியான நிலை வாராதா என்று கருதவேண்டாமா?

பெரியார் தலைமைப் பதவியை மணியம்மைக்குச்சூட்டுவதற்கு ஆக மணியம்மையை மனைவியாகவோ வார்சாகவோ பெறவேண்டிய அவசியம் என்ன?

இயக்கத்தில் இதுவரை நடந்து வந்த நடப்பு விதிகள், கான்ஸ்டிடியூஷன் இன்னது என்று தெரியாத, அறியாத மனிதர்கூட இதைச் சொல்ல முனையமாட்டாரே. "மணியம்மைக்குத் தலைமைப் பதவி சூட்டுவதற்கு ஆக நான் வார்சு முறை ஏற்படுத்துகிறேன்" என்று பெரியார் எங்கு சொல்லியிருக்கிறார்?

"எனக்குப்பின் கட்சிக்கும், என் சொத்துக்கும் அடுத்த வார்சு ஏற்படுத்த வேண்டும். இதை விரைவில் செய்யப்போகிறேன்" என்பதானது,

"இது கோவை மகாநாட்டில் பெரியார் சொன்னது."

அடுத்த ஆதாரம்,

"இயக்க விஷயத்தில் எனக்கு இதுவரை அலைந்ததுபோல் அலைய உடல் நலம் இடம் கொடுக்கவில்லை"

"என்னைப்போல் பொறுப்பு எடுத்துக் கொள்ளத்தக்க ஆள் யார் இருக்கிறார்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை உள்ளவர்கள் கிடைக்கவில்லை."

"ஆதலால் எனக்கு வார்சாக ஒருவரை ஏற்படுத்தி அவர்மூலம் ஏற்பாடு செய்துவிட்டுப் போகவேண்டும் என்று அதிக கவலைகொண்டு இருக்கிறேன்."

"இதுபற்றித்தான் சி ஆர். அவரிடம் பேசினேன்"

என்பது "இது 19—6—49ல பெரியார் எழுதியது"

இரண்டும் இந்தப்படியே இருக்கிறதாகவே வைத்துக்கொள்வோம்.

இந்த இரண்டு வாக்கியத்திலும் இயக்கத் தலைமைக்கு ஆக இந்த ஏற்பாடு என்றாவது, இயக்கத் தலைமையை சூட்டுவதற்கு ஆக வார்சு என்றாவது காணப்படுகிறதா என்பதை எதிரிகள் தவிர்த்து மற்றவர்கள் கூர்ந்து பார்க்க வேண்டும்.

இயக்கத்தில் பெரியார் தொண்டு இன்னது என்பது யாருக்கும் தெரியும். அப்படித் தொண்டு செய்யக் கூடியவர்கள், பெரியாருக்குப்பின் தொண்டுசெய்ய யார் இருக்கிறார்கள் என்பது அதாவது ஒருவரும் தென்படவில்லை என்பது பெரியார் கருத்து.

"அப்படிப்பட்ட தொண்டு செய்ய ஒரு ஏற்பாடுசெய்கிறேன். அதற்கு வார்சு வேண்டும்." என்கிறார்.

ஏன் வேண்டும்?

அந்த தொண்டை நடத்த.

எப்படி நடத்துவது?

பண்டுவைத்து நடத்துவது. பெரியார் வைக்கும் பண்டை, நிதியை வேறு ஒருவர் வந்து வார்சு கொண்டாடாதபடி தடைசெய்ய வார்சு ஏற்படுத்தி, அந்த வார்சையும்கூட இருந்து நிர்வாகம் செய்யும்படி ஏற்பாடு செய்வது.

இந்த ஏற்பாட்டுக்கும் கழகத்துக்கும் சம்பந்தமே இருக்காது என்றுகூட சொல்லலாம். எப்படி என்றால்? கழகத்துக்கு யார்வேண்டுமானாலும் தலைவராகலாம், கழகம்எப்பேர்ப்பட்டவர்கள் கைக்கும் போய்விடலாம், கழகத்தை இன்றைப் போக்கில் யார் வேண்டுமானாலும் விலைக்கு வாங்கி எப்படி வேண்டுமானாலும் நடத்தலாம். இது திராவிட கழகத்துக்கு மாத்திரமல்லாமல் எந்தக் கழகத்துக்கும் இயற்கை.

அப்போது டிரஸ்ட்டும், நிதியும் சரிவர நடக்க அதாவது டிரஸ்ட்டு நடக்காமல் இருந்தால் நடக்கும்படியோ, கண்டவர்கள் தவறுசெய்தால் செய்யாமல் இருக்கும்படியோ பார்க்க, ஒரு அத்துக்கு, டிரஸ்டடு நிதிக்குடையவனுடைய வார்சு உரிமை ஒரு காவலாக இருக்கவேதான் வார்சு.

இதுவும் நிரந்தரமாய் இருக்க முடியாது என்பது இயற்கை ஆனாலும், கூடுமான அளவு ஒரு தலைமுறைக்குஆவது நடக்கலாம் என்கின்ற ஒரு ஆறுதலுக்கு வார்சு என்று கருதுகிறார்.

இந்தக் கருத்தைப் பெரியார் பலதடவை தெளிவுபடுத்தி இருந்தும் 'இயக்கத் தலைமைக்கு வார்சு' என்றே மக்களுக்குச் சொல்லி ஏய்ப்பதென்றால், இத்தனை மக்களுக்குமா இயக்க நடப்பு விதி, தலைவர் தேர்தல், முதலியவை தெரியாமல் இருக்கமுடியும்?

டிரஸ்டில் இயக்கக் கழகத் தலைவர் இன்னார் என்று எழுதிவிடுவதாலும் தலைவராகிவிடமுடியுமா?

பெரியாருக்கு அவ்வளவுகூட விதிமுறைதெரியாதா? யாரை அவர் "தலைவராக எழுதினாலும்" மக்கள் ஒத்துக் கொண்டால்தானே அதுவும் தேர்தலில் தெரிந்தெடுக்கப்பட்டால்தானே அது செல்லும்?

இவ்வளவு தெளிவு இருக்கும் போது இயக்கத்துத் தலைவர் மணியம்மை "அந்தக் குமரி அந்தப் பேய்..............." என்றெல்லாம் வைவதற்கும், இந்தக் கற்பனையைப் பயன்படுத்திக்கொண்டால் இது எத்தனை நாளைக்குச் செல்லும்? இதில் எவ்வளவு நாணயம் இருக்கமுடியும்?

இந்நிலையில் "பெரியார்பல்ட்டி அடித்துவிட்டார், ஏமாற்றுகிறார்" என்றும் எழுதுவதால், இதனால் மக்களை அறியாதவர்களாக ஆக்கலாமே தவிர பெரியாருக்கோ, அவர் தொண்டுக்கோ, இயக்க நடப்புக்கோ என்னகெடுதி ஏற்படக்கூடும்?

"என்னைப்போல் அலைந்து திரிய, தொண்டுக்குத்—தகுதியானவர்கள் என் புத்திக்குக் கிடைக்கவில்லை" என்கிறார். யாராவது இருப்பதாக யாருமே குறிப்பிடவில்லையே, யாராவது நடந்ததாகவும் காணப்படவில்லையே.

கடைசியாக ராமாமிர்த அம்மையாரைத்தான் காட்டமுடிந்தது.

அதுவும் அந்த அம்மையாரே "நான் இல்லையா?" என்று "முன் வந்தார்." ரொம்பசரி நாளைமுதற்கொண்டே அவர்கள் செய்யட்டும் யாரும் தடுக்கவில்லை, ஒரு 3-மாத காலமாவது அந்தம்மாள் கோவை

ரோஜா முத்தையா நூலக அறக்கட்டளை

யில் குறிப்பிட்டபடி செய்யும் தொண்டைப் பார்த்துவிட்டு, பெரியார் அவர்சொன்ன வார்த்தையை வாபசு வாங்கிக் கொள்ளுகிறார். அதற்கு ஆக அவரது மற்ற ஏற்பாடு தவக்கப்பட வேண்டியதேன்? இதனால் கெட்டுப்போகும் காரியம் என்ன இருக்கிறது? குறை கூறும் காரியம் என்ன இருக்கிறது? யாரைக் கூட்டமாகவோ தனிப்பட்ட முறையிலோ குறை கூறப்பட்டிருக்கிறது?

இயக்கத்துக்குப் பணம் வேண்டாம் என்கிறார்கள்? யாரும் கட்டாயப்படுத்திப் பணம் கொடுக்க வரவில்லை. பெரியாருக்கு "இருக்கும் நிதியை" நல்லவழியில் பயன்படுத்த வாரிசே அல்லாமல் இயக்க நிதிக்கு வாரிசு அல்ல. ஆதலால் இயக்க நிதிக்குத் தனி வாரிசு என்றாவது, இயக்க சுவாதீனத்தில் பெரியாரின் நிதி வைக்கப்படுகிறது என்றாவது யாரும் கற்பனை செய்துகொள்ளவேண்டியதில்லை.

சிலருக்குத் தன்னலனுக்கு அல்லாமல் பொது நலனுக்குப் பணம் தேவையே இருக்காது. சிலருக்குப் பொதுநலனுக்கு அல்லாமல் சுய நலனுக்குப் பணம் தேவையே இருக்காது. இருவரும் பண விஷயத்தில் முட்டிக்கொண்டால் சிரிப்புக்கு இடமாகத்தான் இருக்கும்.

மற்றும் சில உண்மைகள், முதல் பக்கம் பெரியார் அறிக்கையில் தெரிந்துகொள்ளலாம். மற்றவை பின்னால்.

---

# வெங்கட்டராமனிஸம் வெற்றிபெற்றது!

1948-பிப்ரவரி மாதம் 4ம் தேதி 'சட்ட விரோத'மென்று தடை விதிக்கப்பட்ட ரா. சு. சே. சங்கம் 1949 ஜூலை 12-ம் தேதி யன்று தடை நீக்கப்பட்டிருக்கிறது.

தடை போடவேண்டிய நிர்ப்பந்தமானது உலகப் பெரியாரைப் பட்டப் பகலில் படுகொலைசெய்த சதிச்செயலுக்கு, இச்சங்கம் உடந்தையாக, தூண்டுகோலாக இருந்ததென்று இந்தநாட்டு "மக்கள் சர்க்கார்" முடிவுக்கு வந்துவிட்டதினால் ஆகும்.

இப்போது "அதே சர்க்கார்" தான் அந்தத் தடையை எடுத்துவிட்டார்கள்.

இந்தத் தடை நீக்கத்திற்குச் சர்க்கார் கூறும் சமாதானங்கள், உண்மையிலேயே பொருத்தமானவைகள் தானா என்று பார்த்தால் அப்படி நம்மால் நினைக்கக்கூட முடியவில்லை.

"இந்துஸ்தான் சர்க்காரையும், முத்திரை போடப்பட்ட காங்கரஸ் கொடியான இந்துஸ்தான் கொடியையும், இனிமேல் ரா. சு. சேக்கள் மரியாதை செய்வார்கள்.

ரகசிய வேலைத்திட்டங்களையும் பலாத்காரப் போக்கினையும் ரா. சு. சேக்கள் விட்டுவிடுவார்கள்.

ரா. சு. சேக்களின் தலைவர், ரா. சு. சேக்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்.

ரா. சு. சே. சங்கம் இனிமேல் ஒரு கலாச்சார, ஜனநாயக ஸ்தாபனமாக வேலை செய்யும்"

இந்தக் காரணங்களினால்தான், ரா. சு. சே. சங்கத்தின்மீது போட்டிருந்த தடையை நீக்கி விட்டு, 'மக்கள் சர்க்கார்' அதற்கொரு சந்தர்ப்பம் கொடுப்பது, அவசியம் என்கிற முடிவுக்கு வந்து விட்டேன் என்கிறது.

மதம் பெரிதா? மனிதத்தன்மை பெரிதா? என்றால் மதமே பெரிது என்று முழக்கமிட்டு, மனிதத்தன்மையின் மீது—மனித உரிமையின் மீது—மனிதனின் அமைதியான வாழ்வின் மீது, மிகமிகக் கொடூரமாக, அருவெறுப்பான போக்கை கைக்கொண்டு வந்திருப்பவர்கள் மத வெறியர்கள். இப்பேர்ப்பட்ட வெறியை இந்த நாட்டில்வளர்த்து, தழைத்தோங்கச் செய்து, ஏழைப் பாட்டாளிகளின் எலும்புக் குவியலின்மீது, எத்தனையோ பாமரர்களின் இரத்தத்தைக் குழைத்து, இந்துஸ்தான் சாம்ராஜ்ஜியத்தை —அசல் ராமராஜ்ஜியத்தை நிறுவிடவேண்டுமென நினைப்பவர்கள் இந்துமகாசபைக்காரர்கள். இந்து மகாசபையின்லட்சியம்என்னவோ அதை ஈடேறச்செய்ய, அந்த இந்துமகாசபையால் படைக்கப்பட்ட முன்னோடும் மறப்போர் வீரர்கள் ரா. சு. சே-க்கள்.

இந்த ரா. சு. சே-க்களுக்கோ, இந்துமகாசபைக் காரர்களுக்கோ இப்போதைய இந்துஸ்தான் சர்க்காரை மரியாதை செய்வதாலோ, இந்துஸ்தான் கொடியையும் தங்கள் கொடியோடு சேர்த்துக்கொள்வதாலோ பார்க்கப்போனால் என்ன கெடுதி? வந்துவிடும். அல்லது அவைகளினுடைய எந்தப் போக்குக்கு இவை தடையாக இருக்கமுடியும்?

தலைவரைத் தேர்ந்தெடுப்பதினாலேயே அந்தக் 'கொலைவெறியர்களின்' ஸ்தாபனம் கொலைவெறியை விட்டுவிட்டதென்று எப்படிச் சொல்லமுடியும்?

ரகசிய வேலைத் திட்டம் கைவிடப்படும், பலாத்காரச் செயல்களைத் தூண்டமாட்டோம்என்று இன்று ரா. சு. சே-க்கள் ஒப்பந்தத்திற்குக் கூறியிருக்கிறார்களே தவிர, மத வெறியான மிருக வெறிக்கு ரகசிய வேலைத் திட்டமும் பலாத்காரப் போக்கும்வலக்கையும் இடக் கையுமாகும் என்பதைச் சரித்திரமல்லவா சொல்லுகிறது?

"ஒரு கலாச்சார ஜனநாயக ஸ்தாபனம்" இந்த சமுதாயத்தை அதன் தார்மீக சமஸ்கிருத கலாச்சார அடிப்படையில் அதற்குப் புத்துயிர் அளித்து, மீண்டும் தீவிரமானதாகச் செய்யும் ஸ்தாபனம் என்று விளக்கப்படுகிறது.

விஷம் எல்லாம் இதுதான். வெறிக்கு இருப்பிடமே—அதன் தாய்மையே இதுதான்.

இதை நமது 'மக்கள் சர்க்கார்' உணரவில்லை என்றால், காந்தியார் கொல்லப்பட்டதற்காக ரா.சு. சேக்களைக் கைது செய்தது, அதுவும் 40000 பேரைக் கைது செய்தது எவ்வளவு தவறான காரியம்? என்று 'மித்திரன்' கேட்பதை எப்படித் தப்பு என்று சொல்லமுடியும்?

ஆகவே, 20ம் நூற்றாண்டு வெங்கட்டராமனிஸமே! இந்து மதக் கொலை வெறியர்களே! வாழ்க! வாழ்க!! என்று வாழ்த்துகிறோம்.

---

(7ம் பக்கத்தொடர்ச்சி)

நிச்சயிக்கவேண்டும். நமது முன்னோர்கள் சொன்னார்கள் என்பதற்காக நாம் எதையும் நம்பிவிடக்கூடாது. நான் நன்றாகச் சிந்தித்துப் பார்த்ததில் நீங்கள் தொழுதிடும் கடவுள்கள் உண்மையிலேயே கடவுள்கள் அல்ல என்று தெரியவந்தேன். அதையே நான் உங்களுக்கும் கூறிவருகிறேன். நீங்களும் நன்றாகச் சிந்தித்துப் பார்த்தால் நான் வந்த முடிவுக்கே

நீங்களும் வருவீர்கள் என்பது எனக்குத் தெரியும். கடந்த காலத்து மனிதர்களின் எண்ணங்களும் நினைவுகளும், நிகழ்காலத்து மனிதர்களைப் பிணைத்திருக்கும்படி விடக்கூடாது!! என்று கூறினார் சாக்ரடீஸ்.

நாளுக்கு நாள் சாக்ரடீசுக்கு ஆதரவும் எதிர்ப்பும் வளர்ந்து கொண்டே சென்றன. அவரிடம் சிஷியர்கள் பலர் கூடினார்கள்.

மேலும் சாக்ரடீஸ் கூறினார்: "மனிதனின் அறிவு அவனுடைய புலன்களால் ஏமாற்றப்படுகிறது. மனிதனால் இவ்வுலகில் பார்க்கக் கூடிய பொருள்கள், பார்க்க முடியாதவைகளைக் காட்டிலும் மிக மிகக் குறைவு. மனிதன் கற்றது அவன் கல்லாதவைகளைக் காட்டிலும் மிக மிகச் சிறியதே. சிந்தனை தெய்வீகத் தன்மை வாய்ந்தது. ஆதலால் மக்கள் சிந்தனையாளர்களாக விளங்க முன்வரல் வேண்டும். ஒவ்வொரு செயலையும் செய்யப்புகுமுன், இதை அல்லது அதை, செய்தால் என்ன நன்மை, என்ன தீமை? இந்த அல்லது அந்தப் பொருளின் உண்மைப் பொருளென்ன? என்பன போன்று தன்னைத் தானே மக்கள் கேட்டுக் கொள்ளவேண்டும். அப்பொழுது தான் அவர்கள் உண்மையை உணர ஆரம்பிப்பார்கள்."

சாக்ரடீசின் புதுக் கொள்கைகள் நாட்டிலே அவருக்கு விரோதிகளை உற்பத்தி செய்தது. மனிதர் அனைவரும் கடவுளாலே நடத்தப்பட்டுவருகின்றனர் என்று சொல்லப்பட்டுவந்ததைத் தவறு என்றும், ஒருவரின் மனமே அவரது வாழ்க்கையை ஒழுங்கு செய்யவல்லதென்றும், உயரிய நோக்கங்களைக் கொண்டே ஒருவர் வாழவேண்டுமென்றும், கடவுள்களுக்கு உயிர்ப்பலி இடுவது கூடாதெனவும் சாக்ரடீஸ் கூறிவந்ததைச் செவியுற்ற பலர், அவருடைய கொள்கைகள் நாட்டிற்குக் கேடு பயப்பன என்றும், ஆதலால் அவர்மீது தக்க நடவடிக்கையை அரசாங்கம் எடுக்க வேண்டுமென்றும் கூறினார்கள். மேலும், நாட்டிலுள்ள இளைஞர்களைப் பல கேள்விகள் கேட்டு அவர்களின் மனதைக் கலக்கமுறச் செய்தும், அவர்கள் இதுகாறும் உண்மை எனக் கருதியவைகளை அய்யுறுமாறு செய்தும், சாக்ரடீஸ் இளைஞர்களைத் தீய நெறியில் செலுத்த முயன்று வருவதாகவும், அவருடைய விரோதிகள் நாட்டிலே கூறிவந்தார்கள்.

மேற்கூறிய விஷயங்களைச் செவியிலேற்ற ஆதன்ஸ் அரசாங்கத்தார் சாக்டீசின்மீது பல குற்றங்களைச் சாட்டி விசாரணைக்காகத் தங்கள்முன்பு கொண்டுவருமாறு உத்தரவு பிறப்பித்தார்கள். பின்பு சாக்ரடீஸ் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டார்.

சாக்ரடீஸ் ஒருமாதகாலம் சிறையிலே கழித்தார். தான் சிறையிலிருந்தபோது சாகப்போகிறோமே என்ற பயம் சிறிதும் இன்றித் தம்மைச் சூழ்ந்திருந்த அன்பர்களுடன் இன்பமாக உரையாடிக் கொண்டுதான் இருந்தார். சாக்ரடீஸ் சிறைச்சாலையிலிருந்தபோது அவரது சீடனொருவன் அவரைத் தவறான முறையிலே விடுவிக்க முயன்றான். ஆனால் சாக்ரடீஸ் உயிருக்கஞ்சி தப்பி ஓட மறுத்து விட்டார்.

சாக்ரடீசின் கைகளிலே ஒரு கோப்பைக் கிண்ணம் தரப்பட்டது. ஆ! அக் கோப்பைக் கிண்ணத்தில் சாக்ரடீசின் உயிருக்கு உலை வைக்கப்போகும் நஞ்சு இருந்தது. சாக்ரடீஸ் அந்த நஞ்சை உண்ணவேண்டும். அவர் அஞ்சவில்லை. ஆனால் சிரித்தார். தன்னை மாய்க்கப்போகும் நஞ்சைக் கண்டு சிரித்தார். இல்லை; தான் இறந்த பிறகு மாளப்போகும் மூடக் கொள்கைகளை நோக்கிச் சிரித்தார்.

நாட்டிற்கு நல்லுபதேசம் செய்ததற்காக சாக்ரடீஸ் கண்ட பலன் மக்களின் எதிர்ப்பு! உண்மையை மக்கள் உணரவேண்டிப் பாடுபட்ட உத்தமனுக்கு அன்று உலகம் அளித்த பரிசு ஒரு கோப்பை நஞ்சு!! தன்னலன் கருதாது மக்களின் நன்மைக்காகவே பாடுபட்ட மகானுக்கு அக்கால கிரேக்க மக்கள் அளித்த பிரதி உபகாரம் ஏளனம்!!!

சாக்ரடீசின் எதிரிகளால் அவர் உடலைத்தான் அழிக்க முடிந்தது. அவருடைய கொள்கைகளையோ அன்றி அவரின் புகழையோ அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

சாக்ரடீஸ் நஞ்சுண்டு இறக்குந் தருவாயில் அவருடைய சீடனொருவர், அவர் எப்படி தனது உடல் தான் மாண்டபிறகு, புதைக்கப்பட வேண்டுமென விரும்புகிறார் என்று கேட்ட கேள்விக்கு, சாக்ரடீஸ் புன்முறுவலுடன் கீழ்க்கண்டமாதிரி பதிலிறுத்தார். "நீ எப்படி விரும்புகிறாயோ அப்படியே செய், உன்னால்மட்டும் என்னைப் பிடிக்க முடியுமானால்!"

ஆம்! அவர் புகழுடம்பை யாராலும் புதைக்க இயலாது. அவர் புகழ் உலகம் உள்ளவரை மறையாது. ஆம்! அவர் புகழின் செல்வன்.

—இராமதுரை.

## புரட்சி மணம்!

குளித்தலை, ஜூலை 8.

"தொழிலுலகம்" ஆசிரியர் கி. பிச்சமூர்த்தி அவர்களுக்கும், குடந்தை எஸ். நடேசாச்சாரியார் புதல்வி சந்திரா தேவிக்கும் நேற்று புரோகிதம் ஒழிந்த புதுமுறைத் திருமணம் இனிது நடைபெற்றது. "தமிழர் நாடு" ஆசிரியர் தோழர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தலைமை வகித்து ஒப்பந்தத்தை நடத்தி வைத்தார்கள். மணமக்களைப் பாராட்டி உள்ளூர் வெளியூர் பெருமக்கள் பேசினர். பல ஸ்தாபனங்களிலிருந்தும் வாழ்த்துப் பத்திரங்கள் பல வந்தன. மணமக்களை வாழ்த்தி எண்ணற்ற வாழ்த்துத் தந்திகளும், தபால்களும் வந்து குவிந்தன. பரிசுகளையும் நண்பர்கள் வழங்கினர். மாலை "இசை ஒளி" எம். கே. தியாகராஜபாகவதர் அவர்கள் சகோதரர் எம். கே. கோவிந்தராஜ பாகவதரவர்களால் தக்க பக்க வாத்தியங்களோடு இன்னிசை விருந்தளிக்கப்பட்டது. விசுவகர்ம சமூகத்தாரிடையே புரோகிதம் ஒழிந்த புதுமை மணம் இது ஒன்றே!

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ரொம்ப விசுவாசத்தாலே தானோ! நாளைக்கு எந்தச் சூத்திரப் பயலாவது சொல்லுவாங்காணும். "சரசுவதி மகால்லே ஒரே சமஸ்கிருத மயம். பாப்பானுங்களா கூடிக்கிட்டு பண்ணிப்புட்டானுங்க அக்ரமம் 'அப்படின்னானுங்கன்னா......' இந்தாபாரு தம்பி, இதோ முன்னாலே நிக்கிறாரே மீசை வச்சவரு, உங்களவர்தான், பிராமணரில்லே. அவர்தான் இந்த மகாலைக் கட்டுனவர். சும்மா சமஸ்கிருதத்தைப் பழிக்காதே. அதுக்கு மகிமையில்லாமையா 60000 பவுன், தம்பி, ரூபாகூட இல்லே, செலவழிச்சு இதை ஸ்தாபிதம் பண்ணினாரு' அப்படின்னு அடிச்சுப் பதில் சொல்லலாங்காணும். அதுக்காகத்தான் நாளை கன்னிங் துரை ஏதோ உடன்படிக்கை செய்துக்க வரயிலே நம்ம ஆரியப்பட்டரையும் சந்திப்பாராம், அப்போ சிலை வைக்கச் சொல்லி கேக்கப் போறாரு, நம்ப குருதேவ். புரியுதா இப்போ"

சிலை வைப்பதற்குப் பார்ப்பனர்களின் அந்தரங்க நோக்கம் மேல் கண்டதாக இருந்தது.

*  *

"என்ன, கன்னிங் எப்படியிருக்கிறது ஊர், உடன்படிக்கை ஷரத்துக்களைப் பூர்த்தி செய்து விட்டாயா? ஆரிய பட்டரைச் சந்தித்தாயா" தஞ்சை சென்று திரும்பிய மிஸ்டர் கன்னிங்கைக் கேட்டான், தளபதி பிரெடிரிக்.

"செழிப்பான ஊர் சார். ஒப்பந்த நகலைக் கொண்டு வந்திருக்கிறேன், தங்கள் பார்வைக்கு. சரபோஜிக்கு சிலை ஒன்று கட்ட வேண்டுமாம், முழு உருவச் சிலை, சரஸ்வதி மகால் முன்பு வைக்க. ஆரிய பட்டர் என்னிடம் சொன்னார்"

"சரி, நமக்கென்ன? அவர் இஷ்டம் போல், சிலைக்கு 'ஆர்டர்' கொடுத்துவிடு"

"'பஸ்ட்'டாயிருந்தால் தொந்தரவு இல்லை. முழு உருவச் சிலை ஆயிற்றே. எப்படி அமைப்பது சார்? சிலை செய்யப்படும் மனிதரின் சிறப்பைக்காட்டக் கைகளிலே அதற்கேற்ற சின்னம் தர வேண்டுமே! தென்னாட்டான் என்ற 'ஹோதா'வில் சண்டையில் தீரர்களென்பதற்குக் கையில் ஒரு வாள் பிடித்திருப்பதுபோல் உருவம் அமைக்கச் சொல்லலாமா?"

"கன்னிங், பைத்தியக்காரனப்பா நீ. வாள் என்ன தெரியுமா, வீரத்தின் சின்னம். சரபோஜி கைகளிலா அதைக் கொடுக்கிறாய். ஆங்கிலப் படைகளைக் கடைசி வரை எதிர்த்து சண்டையிட்ட தீரனோ. அவன் இடையில் வாள் தொங்குகிறதே என்று நினைக்கிறாயா? அது அவனைப் பொறுத்த மட்டில் இரும்புத் தகடுதானப்பா. உபயோகிப்பவனுக்குத்தான் அது வாள். அவன் கைகளும் மரக்கட்டைதான். வாளிருந்தும் பிடித்தறியாக் கைகளைக் கரங்கள் என்று எப்படிக் கூறுவது. அவன் கைகளில் ஓடுவதும் இரத்தமல்ல. மராட்டிய இரத்தமாயிருந்திருந்தால், மாதம் மூன்றானாலும் நாம் திணறிக்கொண்டல்லவா இருந்திருப்போம் தஞ்சைப் போரில். அவன் கை நரம்புகளில் ஓடுவது வாழைத் தண்டைப் பிழிந்தால் வருகறதே நீர், ஒன்றுக்கும் உதவாத வெறும் நீர். அதேதான். நம்மோடு போர் புரியாதவரை நமக்கு நல்லதுதான்! ஆனால் வாளை அவன் கரங்களில் கொடுக்கிறேனென்கிறாயே, அது சரியல்ல. நமது படைகளை எப்படிக் கரங்கூப்பிப் பணிந்து வணங்கி வரவேற்றானோ அந்தக் காட்சியை அப்படியே சிலையாக நிறுத்திவிடு. தெரிகிறதா?" என்று உத்திரவிட்டான் பிரெடிரிக்.

இப்படியாக மராட்டிய மன்னனுக்கு, அவனது தஞ்சை ஆட்சிக்குப் படுகுழி தோண்டப்பட்டது பார்ப்பனர்களால்.

மேலே கண்ட நிகழ்ச்சிகள் எவ்வளவு தூரம் சரித்திர ஆதாரம் கொண்டவை என்பது எனக்குத் தெரியாது. ஆனால் சென்ற சில மாதங்களுக்கு முன்னால் வெளிவந்த கல்கி இதழில் 'சரபோஜியின் கலைக் கோவிலைக்' காட்டிய கல்கியாரின் சரித்திர சான்றைவிட நான் காட்டியிருப்பது அதிக ஆதாரம் கொண்டது என்பது எனது துணிவு.

இதில், சரஸ்வதி மகால் நிறுவ மன்னன் **60000** பவுன் செலவிட்டது அதிலே இடம் பெற்ற சமஸ்கிருதச் சுவடிகள் **30000**, ஆனால் தமிழ், மராட்டி முதலிய மொழிச் சுவடிகள் ஆயிரத்து சொச்சம் மட்டும், ஆங்கிலப் படைகள் தஞ்சைக்குள் புகுந்தபொழுது மன்னன் போரிடவே இல்லை— இவை வெளிப்படையாகத் தெரிந்த உண்மைகள். இவைகளின் அடிப்படையைக் கொண்டுதான் மேலே சொல்லிய சித்திரம் தீட்டப்பட்டது.

சரபோஜி போரிடாததற்குக் கல்கியார் கூறும் காரணம் அறிவுடையோரால் எள்ளி நகையாடப்படும். எழுதுகிறார் ஆச்சாரியாரின் அன்பர், ஆங்கிலப் படை தஞ்சை அரண்மனைக்குள் புகுந்து மன்னனைத் தேடி சரஸ்வதி மகாலுக்குள் கண்டு பிடித்ததாம். படைத்தலைவன் கேட்டானாம் மன்னனைப் பார்த்து, ஏன் போரிடாமல் இங்கே ஒளிந்து கொண்டீரென்று. சரபோஜி சொன்னானாம், நான் ஒளியவில்லை. இங்கே உள்ள நூல்கள் எனக்கு உயிர் என்றானாம். அப்படிஎன்ன அதில் உயர்ந்த நூல்கள் இருக்கின்றன என்றானாம் படைத்தலைவன். யுத்த சாஸ்திரத்தில் எதிரியைப் பைத்தியமாக அடிக்கக்கூடியமுறைகளெல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன என்றானாம் மராட்டிய மன்னன். ஏன் அவற்றை உபயோகிக்கவில்லை ஆங்கிலப்படை மீது என்றதற்கு, நீங்கள் தான் முதலிலேயே பைத்தியமாயிற்றே தெளிந்த அறிவிருந்தாலல்லவா அதை உபயோகிக்கலாம் என்றானாம், அரசன் சரபோஜி என்று கல்கி எழுதியிருக்கிறது.

கல்கியார் உள்ளபடியே தெளிந்த அறிவோடுதான் இதை எழுதினாரா என்பதே புரியவில்லை. அவரது அந்தக் காரணத்திலே கற்பனை இருக்கலாம் ஆனால் கருத்து கட்டை! விவேகமிருக்கலாம், வீரமில்லை!

நாட்டின்மீது பகைவன் பாய்ந்தபொழுது அவனைப் பணிந்து நாட்டையும் நாட்டு மக்களையும் எதிரியிடம் அடகுவைப்பதைப் போன்ற துரோகச்செயல் வேறு கிடையாது. அரசனுக்கும் ஆங்கில வீரனுக்கும் நடந்ததாகக் கல்கியால் கூறப்பட்ட சொற்களில் வாதம் நன்றாகத்தானிருக்கிறது. ஆனால் நாட்டுப் பாதுகாப்பு என்பது 'பிரசங்க மேடை'யல்ல. இந்தத் துரோகச் செயல் கல்கி இனத்தின் தனிப் பண்பு. அதை யாரும் குறைகூறுவதற்கில்லை, ஆனால் மராட்டிய மாவீரனுக்குப்

ரோஜா முத்தையா

பொருந்துமா?

மேலும் கல்கி பிதற்றுகிறது, அரசன் பகைவர் படையெடுப்பைப் பற்றிப் பாராமுகமாக இருந்ததற்குக் காரணம் சரபோஜி 'காம குரோதாதிகளைக் கடந்த சன்மார்க்க நிலை' யெய்தியதுதானாம். எப்படியிருக்கிறது வேடிக்கை! நாடு கேட்டுக்குள்ளாகும் தருவாயில் நாட்டுக் காவலன் சன்மார்க்க நிலை அடைந்து விட்டானாம்! நல்ல அரசன், அதற்கேற்ற வக்கீல் கல்கி!

பார்ப்பன சூழ்ச்சியை மறைக்க இந்த மூடுமந்திரம் போடுகிறது, அந்த ஆரிய இதழ் என்பதல்லாமல் வேறென்ன! உள்ளபடியே சரபோஜி கோழை என்பதானால்கூட அப்படியே விளம்பிடலாமே! எப்படிக் கூறுவார் கல்கி, தன் மொழிப் பாதுகாவலனைத் தாழ்த்தி அவரது சுயரூபத்தை இப்பொழுதாவது அவரைத் தமிழ்ப்புரவலர் என்று கருதும் விபீடணர்கள் கவனிப்பார்களாக?

அந்தச் சன்மார்க்க நிலையைக் காட்ட கரங்குவித்தவாறு சிலை செய்து வைத்தனராம் ஆங்கிலேயர் அவர்மேன்மையைப்பாராட்ட. காலில் வீழ்ந்தவனுக்கு ஏன் செய்து வைக்கமாட்டார்கள் கற்சிலை. பின் என்ன கட்டபொம்முவுக்கும், ஊமைத்துரைக்குமா நினைவுச் சின்னம் நிறுத்துவா?

எந்த மக்களது வரிப்பணத்தைக் கொண்டு சரபோஜி நாட்டை ஆண்டு அனுபவித்தானோ அந்த மக்களது மொழியை வளர்க்கும் எண்ணம் அவனுக்கிருந்திருந்தால் ஆரியஏடுகள் 30,000 இடம் பெற்ற சரஸ்வதி மகாலில், தமிழ்ச் சுவடிகள், ஆயிரம் தானா அமரும்? ஏன், இல்லை வேறு தமிழேடுகள் என்று கூற முடியுமா? அதற்கும் பின்னால் வந்தவர்களால் சிலப்பதிகாரம், தனிப்பாடல்களெல்லாம் சேகரிக்கப்பட்டு அச்சேற்றப்பட்டனவே! இன்னும் கூட எவ்வளவோ தமிழ் ஏடுகள் கவனிப்பாரற்று, கவனிப்பாரிருந்தாலும் ஆதரவுக் குறைவால் கைவிடப்பட்டு தனிப்பட்டோரிடத்தில் முடங்கி செல்லரிக்கப்படுவதாகக் கூறப்படுகிறதே!

குப்பையிலும்மாணிக்கம்கிடைக்கும் என்றபடி திராவிடரின் நல்வாய்ப்பின் பயனாக சில சித்த வைத்திய நூல்கள் அப்புராணப் புளுகுக் குப்பைகளிடையே இருக்கின்றன. அவை இடம் பெற்றதற்குக் காரணம் சரபோஜியின் முயற்சி என்பதைவிட ஏட்டு சேகரிப்புக் குழுவில் இடம் பெற்ற ஓரிரு தனிப்பட்ட திராவிடரின் முயற்சி என்னலாம், அதுவும் பெரும் பார்ப்பன எதிர்ப்புக்கிடையே!

சரசுவதி மகாலிலுள்ள நூற்களைப் பாதுகாக்க வேண்டிய ஆலோசனைகளைக் கூற ஓமாந்தூரார் ஒரு கமிட்டி அமைத்திருக்கிறார். அதன் தலைவர் ஒரு சாஸ்திரி. அது ஒரு சில விபீடணர்களைக்கொண்ட அக்கிரகாரக் கமிட்டிதான். அது ஒரு சில ஏடுகளைப் பிரதி செய்ய 1½ லட்ச ரூபாய்க்குத் திட்டம் வகுத்திருக்கிறதாம். தமிழ் நூல்கள் பற்ற பராட்டி முதலிய மொழிகளில் உள்ளவற்றை மட்டும் கொஞ்சம் பணம் செலவு செய்தால் மறுபிரதி செய்துவிடலாம். அதுவேபோதும். இப்பொழுது இருக்கும் ஆரிய சாஸ்திரங்களையே கொளுத்த வேண்டுமென்ற உணர்ச்சி பரவி வரும்போது மேலும் மேலும் உளுத்துப் போய்க் கொண்டிருக்கும் பொய் மலிந்த புராணக் குப்பைகளைச்சீர்ப்படுத்த ஏன் லட்சக்கணக்கில் செலவிடவேண்டும் என்பது நமக்கு விளங்கவில்லை.

ஆட்சியாளர் வடமொழி ஏடுகளிலும் ஏதாவது அறிவு நூல்கள் (அதெங்கே இருக்கப் போகிறது!) இருக்கும் எனக் கருதினால் வடமொழி வல்ல, ஒரு திராவிடரை நியமித்து அவ்வேடுகளை ஆராயச் சொல்லி நல்லவை இருந்தால் எடுத்துக்கொள்வதைப்பற்றி யாருக்கும் ஆட்சேபனையில்லை. ஆனால் அந்த ஆதிக்கக்காரரையே நியமித்திருப்பது மேலும் மேலும் வரிப்பணத்திற்கும் நஷ்டம், கேடும் பயக்கும். அக்கினியாஸ்திரம், அசுவ சாஸ்திரம், வேதாந்த ரகஸ்யம், ஆக எல்லாம் தத்துவ நூல்கள், உயர்தரமானவை என்றுதான் உத்தரவாதம் செய்வர் உஞ்சிவிருத்திக்காரர்! அதுமட்டுமல்ல. சித்த வைத்தியமும் ஆரிய வேதமான ஆயுர் வேதத்தின் 'காப்பி'தான், அதுதேவையில்லை, இருக்கிறது போதும் என்று அந்த நூல்களை அழித்தாலும் அழிப்பர். இது விஷயத்தில் சர்க்கார் எச்சரிக்கையுடனிருந்து மேலே காட்டிய குறிப்புகளை மனதில் வைத்து ஆவன செய்யக்கோருகிறோம்.

குறிப்பு:— மேலே சரபோஜி துளசியைத் தூவியதாக சித்திரிக்கப்பட்ட நிகழ்ச்சி, நாயக்க மன்னர்கள் மராட்டிய படையெடுப்பின் போது கையாண்டதாக ஒரு கதை வழக்கு உண்டு. ஆனால் அதுவும் ஆதாரமற்ற வாய்வழக்காகத்தான் தெரிகிறது. நாயக்க மன்னர்களைவிட நூற்றுக்கு நூறு மடங்கு ஆரிய தாசனாக இருந்த சரபோஜி தான் அப்படிச் செய்திருக்கலாமென ஊகிக்க நிறைய இடமுண்டு, அவன் போரும் புரியவில்லை. திடீரென ஆங்கிலப் படைகள் புகுந்து விட்டன, அவனை அறியாமலேயே என்ற காரணத்தால்!

"சம்மட்டியார்"

## விருதுநகரிலும் தோல்வி.

விருதுநகர், ஜூலை 12.

விருதுநகர் நகராண்மைக்கழகத்தின் 2வது வார்டுக்கு நேற்று நடந்த இடைத் தேர்தலில் சுயேச்சை அபேக்ஷகரான தோழர் சையத் இப்ராஹிமுக்கு 263 ஓட்டுகள். காங்கரஸ் அபேக்ஷகர் தோழர் அப்துல் ரஹ்மானுக்கு 106 ஓட்டுகள்.

வெளிவந்து விட்டது!
வெளிவந்து விட்டது!!

பலர் நெடுநாளாய் ஆவலுடன் கேட்டுக் கொண்டிருக்கும் இராமாயண ஆராய்ச்சி

**பாலகாண்டம்**
132 பக்கம் ● எட்டு அணா.

**பிரகிருதிவாதம்**
அல்லது
**மெட்டீரியலிஸம்**
76 பக்கம் ● அய்ந்தணா.

**ஞான சூரியன்**
192 பக்கம் ● எட்டு அணா.

தேவைக்கு உடனே எழுதுங்கள்
வியாபாரிகளுக்கு கழிவு உண்டு.
★
—: கிடைக்குமிடம் :—
மானேஜர்,

நூலக அறக்கட்டளை

[2ம் பக்கத் தொடர்ச்சி]

இதன்மீது எதிரிகளுக்கு தங்கள் தோல்வி தெரிந்துவிட்டதால் கொலை வேலையில் பிரவேசித்து விட்டார்கள். அதாவது கொலை வேலை நெருங்கிவிட்டது. பொறுப்புள்ள C. I. D.கள் என்வீட்டுக்கு வந்து ஜாக்கிரதையாக இருக்கச் சொன்னார்கள். கவர்மெண்டு சீப் செக்ரடெரி விடுதலை ஆபீசுக்கு டெலிபோன்செய்து விஷயத்தை உணரும் முறையில் தோழர் துருசாமிக்கு "எச்சரிக்கை" செய்தாராம்.

சில தோழர்கள் வீட்டுக்குவந்து "வெளியில் போகாதே" என்றார்கள்.

பத்திரிக்கைக்காரர்கள் கேமராவுடன் ஆபீசுக்கு வந்து படம் எடுக்க அனுமதி கேட்டார்கள். என் வாழ்க்கைச் சரிதமும் சொல்லச் சொன்னார்கள். எனக்குக் கோபம் வந்துவிட்டது. "நான் என்ன சாகப்போகிறேனா, என் படமும் வாழ்க்கைச் சரிதமும் கேட்கிறாயே" என்றேன்.

அதற்கு அவர்,

"வெளியில் நடக்கிற சங்கதி உங்களுக்குத் தெரியாதுபோல் இருக்கிறது. அதுதான் உங்களுக்கு இவ்வளவு கோபம் வருகிறது" என்றார்.

"நான் செத்தால் மயிர் போச்சுது, என்ன தைரியம் உனக்கு என்னையே வந்து போட்டோவும், சரித்திரமும் கேட்கிறாயே போ வெளியே" என்று சொல்லி கோபமாய் விரட்டி விட்டேன். இவர்கள் பாரததேவி, தினசரி நிருபர்கள் என்று சொன்னார்கள்.

மறுநாள் ஒரு அடி நீளமுள்ள கத்தியோடு வீட்டிற்குமுன் நின்று கொண்டிருந்த ஒருவன் என்னைக் கண்டதும் கத்தியை மறைத்துக் கொண்டான். உடனே கமிஷனர் ஆபீசுக்கு ஆள் அனுப்பிப் போய் தகவல் கொடுத்து வருமாறு சொன்னேன். அங்குசென்று பேச முடியாத நிலையில் ஒரு கூட்டம் இருப்பதாகப் போனவர் திரும்பி வந்தார். வந்தவர் நேரே சிந்தாதிரிப் பேட்டை போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் வேறு விதமாய் தகவல் கொடுத்தாராம். சிந்தாதிரிப்பேட்டை சப் இன்ஸ்பெக்டர் வந்து கூட்டத்தைக் கலைத்து விட்டு ஒரு கான்ஸ்டேபிளை உடுப்பில்லாமல் உட்கார வைத்து விட்டுப் போய் விட்டார்.

அன்று எனக்கு வந்த ஒரு கடிதத்தில் உன் வீட்டின் முன்னும் ஆபீசின் முன்னும் 'கோட்சேக்கள்' இருக்கிறார்கள் ஜாக்கிரதை என்று கண்டிருந்தது.

ரத்தத்தில் கத்தி மாதிரியும், ரத்தம் வழிவது மாதிரியும் சித்திரம் போட்டு சபதம் கூறி இருந்தது. பல கடிதங்கள் சத்தியம் செய்து ரத்தக்குறியும் கையெழுத்தும் இருந்தது. இவைகளெல்லாம் C. I. D. க்குக் காட்டப்பட்டன.

அவர் கவலைப்பட்டு இந்த ஆள்களில் சிலரைத் தெரியும் என்றும் ஆனால் சில ஆளுக்கு C. I. D. போட்டிருப்பதாகவும் சொல்லிப் போனார்.

இதன் மத்தியில் இந்த 2மாதத்தில் தமிழ் பெரியார் திரு. வி. க. அவர்கள் என்னிடமும் மணியம்மை இடமும் சுமார் 4, 5 தரம் "சிறிது நாள்களுக்கு நீங்கள் வெளியில் செல்லவேண்டாம்" என்று மிகக் கவலையோடு சொன்னார்; சில ஆளுகள் பெயரையும் சொன்னார். எனக்கு அலட்சியத்துடன் இயக்கக் கவலையும் உண்டாயிற்று.

கடைசிநாள் 9ந்தேதி, உடுமலைப் பேட்டையில் என் பேரில் கேஸ் ஏற்பட்டு சம்மன் வெளியாய் விட்டதாகத் தகவல் வந்தது.

உடனே அவசரப்பட்டேன், ஒரு நபரை அழைத்தேன், ஒரு வீட்டைக் குறிப்பிட்டு அவ்விடத்துக்கு ரிஜிஸ்ட்ராரை அழைத்து வாருங்கள் என்று சொல்லி அனுப்பிவிட்டு, முன் எச்சரிக்கை இல்லாமல் தியாகராயநகரில் ஒரு வீட்டுக்குச் சென்றோம். 15-நிமிஷத்தில் அங்கு ரிஜிஸ்ட்ரார் வந்தார். பதிவு நடந்தது, வீட்டிற்கு வந்து ஈரோட்டிற்குப் புறப்பட்டு விட்டேன்.

இதுவரை ஒரு உயிரைக் கொன்றால் போதும் என்று கருதிய என் எதிரிகள், இனி இரண்டு உயிரைக் கொன்றாகவேண்டிய அவசியத்துக்குவந்து விட்டார்கள் என்பதுதான் இந்தப் பதிவுத் திருமணத்தால் இப்போதைக்கு எனக்கு ஒரு ஆறுதல்.

நான் மேலே குறிப்பிட்டவைகள் எல்லாம் ஆதாரத்துடன் குறிப்பிடுவதாகும். ஒன்றும் உத்தேசமல்ல கற்பனை அல்ல. இதில் பெயர் குறிப்பிட்டுள்ள எந்த நபரை வேண்டுமானாலும் கண்டு கேட்டுக் கொள்ளலாம். ரிக்கார்டுகள் வேணுமானாலும் பார்த்துக்கொள்ளலாம். பரிகாசம் செய்பவர்கள் பொறுப்பில்லாதவர்களேயாவர்.

ஆகவே இவர்கள் சதியில் சம்பந்தப்பட்ட என் எதிரிகள், வெகு சுலபத்தில் பாமரமக்களைஎன்மீது வெறுப்படையச் செய்து சமயம் பார்த்துக் கொண்டிருந்து கன்யாகுமரி முதல் சென்னை வரை மக்களை ஏய்த்து விட்டார்கள், எனக்கு எதிர்ப்பாய் கிளப்பியும்விட்டார்கள், கண்டபடி எழுதும்படியும் இவர்கள் எழுதியவற்றில் கையெழுத்துச் செய்யும்படியும் செய்து விட்டார்கள் என்பதில் அவர்களுக்கு மிகுந்த வெற்றியும் மகிழ்ச்சியும் இருக்கலாம். ஆசைதீரக் கீழ்த்தரமாய் தங்கள் பத்திரிகைகளில் எழுதிக்கொள்ள வாய்ப்பும் பெற்று விட்டார்கள் என்றாலும், இந்தக் காரியத்தில் தாங்கள் பெருத்த ஏமாற்றமடைந்தார்கள் என்பதோடு அதை இப்போதே உணரத் தொடங்கி விட்டார்கள்.

இனி என்னோடு கலந்து வேலை செய்யவும் மிக மிக வெட்கப்பட வேண்டிய நிலைக்கும் வந்து விட்டார்கள்.

நானும் எதிரிகளின் விஷமப்பிரச்சாரத்துக்கும், சதி வேலைகளுக்கும் தாராளமாய் காலமும் வாய்ப்பும் இருக்கும்படியான தன்மை உண்டாக்கிக் கொடுத்ததுபோல் ஜெயிலுக்குப் போகப்போகிறேன்.

இளைஞர்கள் எப்படியோ போனாலும், சுயநலக்காரர்கள் எப்படியோ போனாலும் பொறுப்புள்ள மக்கள் உஷாராய் இருங்கள்.

எனது திருமணத் தோற்றத்துக்கும் அவசரத்துக்கும் இது முக்கிய காரணம்.

"நம்பிக்கையான ஆள் கிடைக்கவில்லை" என்று சொன்னதற்கு ஆக கோபித்துக் கொண்டதாக வேஷம் போட்டு, மக்களுக்கு ஆத்திரத்தை மூட்டிய உத்தமர்களின் யோக்கியதை ஆதாரத்துடன் பின்னால் விளக்கப்படலாம்.

பொறுத்து இருங்கள்.

**ஈ. வெ. ரா.**

[3ம் பக்கத் தொடர்ச்சி]

நடத்துகின்றனர்.

நாட்டு மக்களுக்கு நன்மையளிக்கத் தோன்றிய தேசிய ஸ்தாபனம், இன்று பணமூட்டைகளைப் பாதுகாக்கும் போலீஸ் ஸ்தாபனமாகி விட்டது. "காந்தியடிகளின் பிரதம சீடர்கள் நாங்கள்—அஹிம்சா வீரர்கள் நாங்கள்" என்று வாய்ச் சவுடால் அடித்துத் திரியும் நயவஞ்சகர்கள் உலவும் புதர்க்காடாக மாறிவிட்டது. பெரியாரும் திரு வி. க-வும் கண்ணீர்விட்டு வளர்த்த காங்கரஸ் சுயநல சொரூபிகளின் மாய வலையிலே சிக்கிச் சிதைவுற்றுவருகிறது. காங்கரஸ் ஒன்றே இந்தியப் பாட்டாளி மக்களின் நல் வாழ்க்கை நிலையம் என்று தொடங்கிய பாசுரம், காங்கிரசை விட்டு வெளியேறுவது தவிர பாட்டாளிகளுக்கு இனி வாழும் வழி வேறெதுவுமில்லை என்ற நிலைக்கு வந்துவிட்டது.

மக்கள் மனதின் மத்தியில் வளர்க்கப்பட்ட காங்கரஸ், இன்று மக்கள் மனதை விட்டு நீங்கி பதவி வேட்டைக்காரர்களின் ஸ்வீகார பிள்ளையாக வளர்கிறது.

காந்தியடிகள் இறந்ததற்குக் காரணம் யாது? பதவிப்பித்தா? சுயநலமா? வர்க்கப் போரா? இல்லவே இல்லை! பின் யார்? காங்கரஸ் ஸ்தாபனத்தையே தங்கள் கைக்குள் போட்டுக்கொண்டு சதிச்செயல் புரிந்துவரும் ஆரியந்தான். கொலைகாரர்கள் பலர் இன்னமும் காங்கரஸ்போர்வைக்குள் புகுந்துகொண்டிருக்கின்றனர். திரைமறைவுச் சூழ்ச்சிகள் நேரடித் தாக்குதல்களாக மாறவே, கோட்ஸே நேரடியாக உத்தமர் காந்தியாரைச் சுட்டுக் கொன்றான்.

ஆகவேதான் நாம் கூறுகிறோம், கோட்ஸேக்கள் உலவும் காங்கரஸ் ஸ்தாபனம் மக்கள் மன்றமில்லை என்று! சூழ்ச்சியும் சதிச் செயலும் காங்கரஸ் ஸ்தாபனத்தில் எப்படி ஒழிந்து மறைந்து கிடக்கின்றன என்பதை இன்று நாம் சொல்லவேண்டியதில்லை. ஏனெனில் இன்று நாட்டு மக்கள் அனைவரும் அறிவர், காங்கரசைப்பற்றி!

கள்ள மார்க்கெட் கழுகுகள் பாட்டாளிகளின் குருதி குடித்து வளரும் நல்ல பாம்புகள், உழைக்காது உழைக்கும் ஊரார் உழைப்பை உறிஞ்சி வாழும் அட்டைகள் இவைகளின் வளர்ப்புப் பண்ணையாக இன்று காங்கரஸ் மாறிவிட்டது. ஆகையால்தான் தன்மானமுடையோர் "நான் ஒரு காங்கரஸ்காரன்" என்று கூறிக்கொள்ள அஞ்சுகிறார்கள்.

காங்கரசைப்போற்றிப் புகழ்ந்து வாழ்த்திய உள்ளங்கள் அத்தனையும் இன்று அதனைத் தூற்றுகின்றன! அந்த இயக்கத்தைப் போற்றி வணங்கிய கரங்கள் அனைத்தும் அதனைத் தாக்கித் தகர்க்கத் திட்டம் போடுகின்றன! காங்கிரஸே இந்தியா, இந்தியாவே காங்கரஸ் என்று சொல்லோவியம் தீட்டியவர்கள், இன்று காங்கரஸ் ஆட்சி ஒழிக என்று கனல் கக்கும் எழுத்துக்களை எழுதுகின்றனர்.

வடநாட்டுத் தர்பாரும், ரூபாய் அணா பைசாக்களின் சலசலப்பும் காங்கரசில் நாளுக்கு நாள் வளர, வளர, காங்கரசிடம் நாட்டிற்குள்ள காதல் மறைவதில் ஆச்சரியமொன்றுமில்லை—வியப்பொன்றுமில்லை. காங்கரஸ் கட்சி கலகலத்துவிட்டது—அதன் அடிப்படை ஆட்டங்கொடுத்துவிட்டது என்பதற்கான அறிகுறிதான் வங்காளத்தில் காங்கரசுக்கு ஏற்பட்டபடுதோல்வி. மாண்டுபோகுமுன் மரணகீதம் பாடுகிறது என்பதற்கான அறிவிப்புதான் "விடுதலை" "திராவிடநாடு" "குடி அரசு" இதழ்கள்மீது விதித்துள்ள ஜாமீன் உத்திரவு!

எனவேதான் நான் கூறுகிறேன் சவக்குழி நோக்கி காங்கிரஸ் ஸ்தாபனம் சென்று கொண்டிருக்கிறது என்று!

—தனமனோகரன்.

# படித்துவிட்டுச் சொல்லுங்கள்!

1. சீதா என்பவள் தன் புருஷன் அதிகக் கட்டுத்திட்டம் காவலாய் இருந்து வந்ததால் வேறு புருஷனுடன் சம்பந்தம் வைத்துக் கொள்ள முடியவில்லை.

2. மீனாட்சி என்பவள் தன் புருஷனுக்குத் தெரிந்தால், உதைத்துக் கொன்றுவிடுவானே என்று பயந்து வேறு புருஷனை ஏறிட்டுக் கூட பார்க்கவில்லை.

3. கமலா என்பவள் ஊர் ஜனங்கள் கேவலமாகப் பேசுவார்களே என்ற மானத்துக்குப் பயந்து இதர புருஷனுடன் பேச்சுவார்த்தை கூட வைத்துக்கொள்ளவில்லை.

4. ரஞ்சிதம் என்பவள் ஒரு புருஷனுடன் சாவகாசம் செய்து கொண்டு இருப்பது உடலுக்கு நல்லது என்று கருதி, பிற புருஷனைப்பற்றி நினைப்பதே இல்லை.

5. பத்மா என்பவள் வேறு வேறு புருஷர்கள் தன் மனதுக்குப் பிடிக்காததினால் யாருக்கும் இணங்கவில்லை.

6. பாலாம்பாள் தான் கேட்ட அளவு பணம் கொடுக்காததால் எல்லோருக்கும் சம்மதம் கொடுக்க மறுத்துவிடுவாள்.

7. கோகிலா என்பவள் தன் கணவனுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தால் புருஷன் தவறுகின்ற வரையில் தானும் தவறுவதில்லை என்று ஒரே பிடிவாதமாய் பிற புருஷரை இச்சிக்காமல் இருந்தாள்.

8. சரஸ்வதி என்பவள் தன்னை மேல் லோகத்தில் செக்கில் போட்டு ஆட்டுவார்களே என்று பயந்து, வந்த கிராக்கிகளை யெல்லாம் திருப்பிவிட்டாள்.

9. சௌந்தரி என்பவள் தான் அவலக்ஷணமாய் இருந்துகொண்டு ஒருவரும் தன்னை விரும்பாததால் அவளுக்கு பிற புருஷ சம்பந்தம் வைத்துக்கொள்ள சந்தர்ப்பமே இல்லாமல் போய்விட்டது.

10. லக்ஷ்மி என்பவள் தான் பதிவிரதைகள் லிஸ்டில் தாக்கல் ஆக வேண்டும் என்கின்ற ஆசையால் வெகு கஷ்டத்துடன் வேறு எவருடைய வேண்டுதலையும் மறுத்துவிட்டாள்.

இந்தப் பதின்மரில் யார் பதிவிரதை?

அச்சிட்டு வெளியிடும் ஆசிரியர் என். கரிவரதசாமி. தமிழன் அச்சகம். 59. கச்சேரி வீதி, ஈரோடு.